# அம்பலவாணர் கலையரங்கம்




## முதலாம் ஆண்டு நிறைவு மலர் - 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பலவாணர் கலையரங்கம்

## முதலாம் ஆண்டு நிறைவு மலர்

## 2018

தொகுப்பாசிரியர்

**பேராசிரியர் கா. குகபாலன்**

**கலைப்பெருமன்றம்**

**புங்குடுதீவு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூலின் தலைப்பு**

"அம்பலவாணர் கலையரங்கம் முதலாம் ஆண்டு நிறைவு மலர் 2018 "

**வடிவமைப்பும் அச்சுப்பதிப்பும்**

கரிகணன் (தனியார்) நிறுவனம்

இல.681, கே.கே.எஸ் வீதி,

யாழ்ப்பாணம்.

**பக்கங்கள்**

60

**வெளியீடு**

22.04.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவு கலைப்பெருமன்றம்
# செயற்குழு உறுப்பினர்

| | |
|---|---|
| போசகர்கள் - | திரு. பொன். சுந்தரலிங்கம் |
| | திரு. சு. நித்தியானந்தன் |
| | திரு. த. இரத்தினராசா |
| தலைவர் - | திரு. இ. இளங்கோவன் |
| உபதலைவர்கள் - | வைத்தியகலாநிதி க. சிறீதரன் |
| | திரு. ந. தர்மபாலன் |
| செயலாளர் - | பேராசிரியர் கா. குகபாலன் |
| உபசெயலாளர்கள் - | திருமதி த. சுலோசனா |
| | திரு. ச. சதாசிவம் |
| பொருளாளர் - | திரு. சி. திருலிங்கநாதன் |
| உறுப்பினர்கள் - | திரு. த. வைத்திலிங்கம் |
| | திரு. த. கிருஷ்ணமூர்த்தி |
| | திரு. தெ. வேழவேந்தன் |
| | திருமதி த. மகேஸ்வரி |
| | திரு. ஓ. ஜெகதாஸ் |
| | திருமதி மேரி ஸ்ரெலா |
| | திரு. சே. சந்திரலிங்கம் |
| | திரு. இ. இரவீந்திரன் |
| | திரு. கோ. மதிவாணன் |
| | திரு. சொ. ரஞ்சன் |
| | திரு. மு. நேமிநாதன் |
| | திரு. கோ. அருள்தீபன் |
| | திரு. ஏ. வசந்தன் |
| | திரு. சி. பரராசசிங்கம் |
| | திரு. ப. வேதநாயகம் |
| கணக்காய்வாளர் - | திரு. சு. சண்முகானந்தன் |
| முகாமையாளர் - | திரு. கு. சந்திரா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டட நிர்மாணக்குழு

## கனடா

சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஸ்ணராஜக்குருக்கள் (போசகர்)

சிவஸ்ரீ தியாக முருகானந்தக்குருக்கள் (போசகர்)

திரு. பொன் சுந்தரலிங்கம் (தலைவர்)

திரு. ச. சதாசிவம் (செயலாளர்)

திரு. சே. சந்திரலிங்கம் (பொருளாளர்)

திரு. ந. தர்மபாலன் (மக்கள் தொடர்பாளர்)

திரு. சி. கனகலிங்கம்

திரு. த. இரத்தினராசா

திரு. செ. சபாரெட்ணம்

திரு. என்.கே. மகாலிங்கம்

திருமதி சத்தியவதி சங்கரலிங்கம்

பேராசிரியர் கா. குகபாலன் (ஆலோசகர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. ஆசிச்செய்தி - கலாநிதி ஆறு. திருமுருகன் | – | 7 |
| 02. ஆசிச்செய்தி - அருட்பணி செபமாலை செபஜீவன் | – | 8 |
| 03. MESSAGE- REGINALD COORAY | – | 9 |
| 04. வாழ்த்துச்செய்தி நா. வேதநாயகன் | – | 11 |
| 05. வாழ்த்துச்செய்தி - பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை | – | 12 |
| 06. வாழ்த்துச்செய்தி - இ. இளங்கோவன் | – | 13 |
| 07. வாழ்த்துச்செய்தி - அ. சோதிநாதன் | – | 15 |
| 08. வாழ்த்துச்செய்தி - திருமதி மஞ்சுளாதேவி சதீஷன் | – | 16 |
| 09. வளர்க உம் சேவை - முருகேசு நேமிநாதன் | – | 17 |
| 10. வாழ்த்துச்செய்தி - மா. தியாகராசா | – | 18 |
| 11. வாழ்த்துச்செய்தி - செ. மகேந்திரன் | – | 19 |
| 12. அகவையொன்று காணும்....அருள்நிதி சி. முருகானந்தவேல் | – | 20 |
| 13. வாழ்த்துச்செய்தி - கோபு மதிவாணன் | – | 21 |
| 14. கலையரங்கத்தின் பணிகள்....இராசமாணிக்கம் இரவீந்திரன் | – | 22 |
| 15. கிராமத்தின் வளர்ச்சிப்பாதையில் ... கு. சந்திரா | – | 23 |
| 16. வாழ்த்துச்செய்தி - சொக்கலிங்கம் ரஞ்சன் | – | 24 |
| 17. பெற்ற தாயும் பிறந்த..... - புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் | – | 26 |
| 18. ஓராண்டுதனிலே ஓவியமாய்... க. புஸ்பமணி, பொ. ஜமுனாதேவி | – | 27 |
| 19. வாணர் புகழ் வானுயர - சி. சதானந்தன், க. மகாலிங்கம், ஜெ. கேதீஸ்வரன் | – | 29 |
| 20. வாழ்த்துச்செய்தி - சுலோசனாம்பிகை தனபாலன் | – | 30 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. கலையரங்கத்தின் தேவை கருதி செயற்பட்ட ... – 32

22. கடந்த ஓராண்டு கால கலைப் ... – 35

23. நன்றியுடன் உங்கள் அனைவருடனும்... – 38

24. இன்று நாம் காணும் கலைப்பெருமன்றம் – 41

25. அம்பலவாணர் கலையரங்க ... – 43

26. இவ்வாண்டு கலைப்பெருமன்றத்தினால்... – 46

27. DR. P. SRIGRISHNA – 47

28. DR. N. SARAVANABAVA – 48

29. MR. SELLIAH MAHENDRAN – 49

30. MR. S. SHANTHIRALINGAM – 51

31. அரும்பணியாற்றிய பெரியோரைப் போற்றுவாம் – 52

32. அம்பலவாணர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் – 55

33. அம்பலவாணர் கலையரங்கம் வரவு செலவு விபரம் – 56




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாம்போதி அமைத்த சிற்பிகள்



அமரர்
கந்தப்பர் அம்பலவாணர் (பெரியவாணர்)




அமரர்
சண்முகம் அம்பலவாணர் (சின்னவாணர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



புங்குடுதீவு கலைப்பெருமன்றம் அமைத்த அம்பலவாணர் கலையரங்கத்தின் ஆண்டு விழாக் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தம் அடைகிறேன். சைவத்தமிழ் வளர்த்த புண்ணிய பூமி புங்குடுதீவு. இம்மண்ணில் பல அறப்பணிகளை ஆற்றிய அம்பலவாணரை நீள நினைந்து உருவாக்கிய அரங்கம் என்றும் சிறக்கப் பிரார்த்திக்கிறேன்.

கல்வியாலும் செல்வத்தாலும் எம்மண்ணில் சாதனை படைத்த புங்குடுதீவு மக்களின் கலையரங்கம் தனித்துவமானது. கலைவளர்க்கும் அரங்கமாகவும் கல்வி வழங்கும் அறிவாலயமாகவும் வாணர் அரங்கப்பணி தொடர இறைவனைப் பிரார்த்திக்கிறேன். இக் கலையரங்கில் மீண்டும் சைவத் தமிழ் மகாநாடுகள் நடைபெறவேண்டும். தமிழ் அபிமானிகள் கூடும் இடமாக எதிர்காலத்தில் சிறக்க வேண்டுகிறேன்.

புங்குடுதீவு கலைப்பெருமன்ற நிர்வாக சபையினருக்கும் சர்வதேசம் முழுவதும் வாழும் ஊர் அபிமானிகளுக்கும் இதயபூர்வமான நல்லாசிகளைத் தெரிவித்து அமைகிறேன்.

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சப்த தீவுகளில் ஒன்றான புங்குடுதீவில் அமைந்திருக்கும் அம்பலவாணர் கலையரங்கமானது இன்று ஓராண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடி மகிழ்வதில் பெருமிதம் கொள்கின்றேன். புங்கையூரில் அமைந்துள்ள ஏனைய அரங்குகளை விட, இவ் அம்பலவாணர் கலையரங்கமானது முக்கிய இடம் வகிக்கின்றது எனக்கூறினால் அது மிகையாகாது.

இதுவரைகாலமும் பல கலைஞர்களையும் பல்வேறுபட்ட கலைநிகழ்வுகளையும் சிறப்புற நடாத்தியதோடு சம்பிரதாய கொண்டாட்டங்களையும் நடாத்துவதற்கு இக் கலையரங்கமானது பல வழிகளில் வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இவ்வாறாக, பல நிகழ்வுகளை நடாத்துவதற்கு உருக்கொடுக்கின்ற விதத்திலே இக் கலையரங்கமானது புதுப்பொலிவுடன் வடிவமைக்கப்பட்டு ஓராண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடுவதை எண்ணி மனம் மகிழ்கின்றேன். இக் கலையரங்கினை நிர்மாணிப்பதற்கு இம் மக்களின் சமூகநலனில் அக்கறைகொண்ட வெளிநாட்டு வாழ் நல்லுள்ளங்களே காரணம் எனக் கருதுகின்றேன். இவர்களின் இந்த அயராத முயற்சியைப் பாராட்டி வாழ்த்துகின்றேன். இவ் அரங்கினை வடிவமைப்பதற்கு பல இன்னல்களையும் இடையூறுகளையும் தாண்டி உருக்கொடுத்ததை எண்ணி வியப்படைகின்றேன்.

இக் கலையரங்கின் ஓராண்டு நிறைவு விழாவினை நடாத்தும் விழாக்குழுவினருக்கும் புங்கையூர் வாழ் மக்களுக்கும் மனதார வாழ்த்துக்களைத் தெரிவித்து இவர்களோடு இணைந்து நானும் குதூகலிக்கின்றேன். அத்தோடு இவ் அம்பலவாணர் கலையரங்கமானது மென்மேலும் விருத்தி பெற்று பல வழிகளிலும் சிறந்தோங்கி வளர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**அருட்பணி செபமாலை செபஜீவன்**
பங்குத்தந்தை, புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம்,
புங்குடுதீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

No: 3945

කාර්යාලය / அலுவலகம் / Office: 021 221 9376
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 021 221 9374
වෙබ් අඩවිය / இணையம் / Web: www.np.gov.lk
මගේ අංකය / எனது இல / My No:

රෙජිනෝල්ඩ් කුරේ
ரெஜினோல்ட் குரே
**Reginald Cooray**
ආණ්ඩුකාරවර, උතුරු පළාත
ஆளுநர், வட மாகாணம்
**Governor, Northern Province**

ආණ්ඩුකාරවර කාර්යාලය
ஆளுநர் செயலகம்
**Governor's Secretariat**

පැරණි උද්‍යානය, නුවර පාර,
චුන්ඩිකුලි, යාපනය, ශ්‍රී ලංකාව.

பழைய பூங்கா, கண்டி வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், இலங்கை.

Old Park, Kandy Road,
Chundikuli, Jaffna, Sri Lanka.

දිනය / திகதி / Date:

FELICITATION MESSAGE OF HONOURABLE GOVERNOR, NORTHERN PROVINCE FOR THE SOUVENIR TO MARK THE 1st ANNAIVERSARY OF PUNGUDUTIVU 'KALAIPPERU MANTRAM' AND 'VAANAR ARANKU' (PUNGUDUTIVU CULTURAL CENTRE AND VAANAR AUDITORIUM)



It gives me a great pleasure to offer this message for the souvenir to mark the ceremony of first anniversary of Pungudutivu 'Kalaipperu Mantram' and 'Vaanar Aranku' (Pungudutivu Cultural Centre and Ampalavanar Auditorium).

The Cultural Centre and the Ampalavaanar Auditorium was declared open in 2017 to honor late Mr.K.Ampalavanar and late Mr. S. Ampalavanar (Cousin brothers who are called as "Vanar Brothers"). who had been living in the Island of Pungudutivu & had been the two great philanthropists of Pungudutivu of the Island sector of Jaffna Peninsula in 1890 during the British colonial period.

I understand that the management committee of the Cultural Centre and the Ampalavaanar Auditorium has been functioning in an efficient and professional manner since it was declared open last year. The Cultural Centre and the Ampalavaanar Auditorium have become the most lively and busily spots in Velanai Division.

Youth of Pungudutivu is actively engaged in education and art activities at the centre. They are following Computer courses and sewing courses there. Vocal music classes, Dance classes and music instrument classes are also conducted at the Centre, School students of the area attend the tuition classes conducted there for the main subjects like Mathematics, Tamil Language, Science and English Language, All these courses and classes are available free of charge at the centre.

Many hundred of youth and school going children become the beneficiaries of the centre and auditorium.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

More than fifty functions including religious & social functions and meetings were held at the auditorium so far. Meetings and functions related to public administration activities, development activities, education-activities, sports activities, music & art activities, women & child rights and gender issues which were organized by government, non-governmental and private organizations were held there last year, So we can define the place as "The hub of getting together and communication" of Pungudutivu.

It is obvious that the Cultural Centre and the Ampalavaanar Auditorium give an enthusiastic and energetic environment to the area and the compound becomes the venue for human resource development by its service to the people. It is recognizable that the physical resource of the centre and Auditorium is effectively and efficiently utilized by the people of Island sector due the appropriate management of it.

I strongly hope that this felicitation message will convey an inspiration to the people, leaders, professionals and social activists from the island area who work hard locally, nationally and internationally for the Socio-economic and Socio-cultural development of Pungudutivu, the other parts of the Island sector and the whole Northern Province of Sri Lanka,

On this happy occasion, I wish them continued success in the future,

Thanks.


**Reginald Cooray,**
**Governor,**
**Northern Province**

Reginald Cooray
Governor
Northern Province



උප කාර්යාලය :
9/1, ලිලි මාවත, ජයන්තිපුර,
බත්තරමුල්ල.

உப அலுவலகம் :
9/1, லிலி மாவத்தை, ஜெயந்திபுர, பத்தரமுல்லை
දුරකථන / தொலைபேசி / Telephone 0112883371
ෆැක්ස් / தொலைநகல் / Fax 0112885436
e-mail hongovcol@gmail.com

**Sub Office :**
**9/1, Lily Avenue, Jayanthip**
**Battaramulla.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Telephone } 021 222 2235

Fax } 021 222 2355

மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

District Secretariat, Jaffna.

General Telephone } 021 222 2234

My No. }

Your No. }

Date } 11-04-2018

# வாழ்த்துச்செய்தி



யாழ் மாவட்டத்தின் தென்மேற்கு பகுதியில் அமைந்துள்ள சப்ததீவுகளில் ஒன்றான புங்குடுதீவில் அமைந்துள்ள அம்பலவாணர் கலையரங்கம் தனது முதலாவது வருட பூர்த்தியை முன்னிட்டு வெளியிடும் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

எல்லா சமூகங்களிலும் மக்கள் தொடர்புகளும் அத்தொடர்புகளின் மையத்தேவைகளும் முக்கியமானவை. அவ்வகையில் இந்தக் கலைப்பெருமன்றமானது அச்சமூகத்தின் சிந்தனை, மனவெழுச்சிகள், நடத்தைக்கோலங்கள், நம்பிக்கை, பெறுமானங்கள் போன்ற சமூக விழுமியங்களை வளர்த்தெடுக்கும் களமாக விளங்குவது வரவேற்கத்தக்க விடயமாகும்,

இக் கலையரங்கமானது இப்பிரதேச மக்களின் வரப்பிரசாதமாகும். அதாவது கடந்தகால அழிவுகளில் இருந்து இச்சமூகத்தை முன்னேற்ற வேண்டும் என்ற நோக்கோடும் இப்பிரதேசத்தை சார்ந்த சமூக ஆர்வலர்கள் மற்றும் புலம்பெயர் வாழ் மக்களின் பங்களிப்போடு குறுகிய காலத்தில் தன்னிகரற்ற வளர்ச்சியை எட்டியிருப்பது மிகவும் பாராட்டப்படவேண்டிய விடயமாகும்.

கலைப்பெருமன்றமானது கல்விசார்ந்த நடவடிக்கைகள், சமூகப்பணிகள் என்பவற்றை ஆற்றிவருவதோடு மட்டுமன்றி அப்பகுதி மக்களின் நலனில் அக்கறை காட்டிவருகின்ற மன்றமாக விளங்குவது அனைவரும் அறிந்த விடயமாகும்.

எனவே இவ் அரங்கமானது இந்த பிரதேசத்தை முன்னேற்றுவதோடு நின்றுவிடாது ஏனைய பிரதேசத்தினருக்கும் சிறப்பான பணிகளையும், பங்களிப்புகளையும் வழங்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு, மேலும் இம்மலரை வெளிக்கொணர முன்னின்று உழைத்த அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**நா. வேதநாயகன்**
அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



மண்பற்று மிக்கவர்களும், சமூகசேவையாளர்களுமாகிய அம்பலவாணர் சகோதரர்கள் புங்குடுதீவினையும் வேலணையினையும் இணைக்கும் கடல் ஊடாக பாதை அமைப்பதிலும் மற்றும் பல சமூகமேம்பாட்டு பணிகளை ஆற்றிய சேவைகளைக் கௌரவித்து அவர்கள் நினைவாக பெரியதொரு கலையரங்கத்தை புலம்பெயர் புங்குடுதீவு மைந்தர்களால் அமைக்கப்பட்டு 2017இல் வைபவரீதியாக சிறப்பான நிகழ்வுகளுடன் திறந்து வைக்கப்பட்டது.

இக் கலையரங்கம் புங்குடுதீவு மக்களாலும் மற்றும் தீவக அரச, தனியார் நிறுவனங்களாலும் பல்வேறு உயர்மட்டக் கல்வி, கலை, பண்பாட்டு நிகழ்வுகளுக்கும் நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் திருமணம் மற்றும் மங்களகரமான நிகழ்வுகளும் இங்கு இடம்பெற்று வருகின்றன.

இக்கலையரங்கை நிறுவியவர்களின் நன்றியுணர்வும் தூரநோக்கும் சமூகபணிகளும் மிகவும் உயர்வானது. புங்குடுதீவு மக்கள் இக்கலையரங்கத்தால் சமூக அங்கீகாரத்தையும் கௌரவத்தையும் பெருமையையும் பெற்றுக் கொள்கின்றனர்.

இக்கண்கவர் கலையகத்தை நல்லமுறையில் பேணிப்பாதுகாப்பது புங்குடுதீவு மக்களின் முக்கிய சமூகப் பொறுப்பாகும்.

புங்குடுதீவில் 1990களுக்கு முன்னர் போல் பெரும் எண்ணிக்கையான மக்கள் வாழக் கூடிய நவீன காலத்துக்குரிய தொழில்வாய்ப்புக்கள், மற்றும் வாழ்வாதார வசதிகளை புலம்பெயர்ந்த புங்குடுதீவு மைந்தர்கள் உருவாக்கவேண்டும்

எமது வாழ்வின் வளமும் எமது மண்ணில் தான்.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
BA.Cey. Ph.D (Durham) DLitt (Jaffna)
வாழ்நாள் பேராசிரியர்,
முன்னாள் துணைவேந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ආණ්ඩුකාර කාර්යාලය<br>උතුරු පළාත<br>පැරණි උද්‍යානය<br>චුණ්ඩුක්කුලි, යාපනය | ஆளுநர் செயலகம்<br>வட மாகாணம்<br>பழைய பூங்கா, சுண்டுக்குளி,<br>யாழ்ப்பாணம் | GOVERNOR'S SECRETARIAT<br>NORTHERN PROVINCE<br>Old Park, Chundikuli,<br>Jaffna |
|---|---|---|
| செயலாளர் / ලේකම් / Secretary: 021-2220661 | பொது / පොදු / General: 021-2220660 | தொலைநகல் / ෆැක්ස් / Fax: 021-2221661 |
| எனது இல / මගේ අංකය / My No: G/NPC/A3/2018 | | திகதி / දිනය / Date: 2018.04.11 |

# வாழ்த்துச்செய்தி



இன்றைய இனிய நாளில் புங்குடுதீவு கலைப்பெரு மன்றம் மற்றும் அம்பலவாணர் அரங்கின் ஆண்டு விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த அரங்கானது வாணர் சகோதரர்களின் நினைவாக அமைக்கப்பட்டு கடந்த வருடம் ஏப்ரல் 15ஆம் திகதி பலரது கடும் முயற்சியினாலும், உழைப்பினாலும் திறந்து வைக்கப்பட்டு இன்றுடன் ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்வதுடன் எமது பாரம்பரிய மற்றும் கலாசார வடிவங்களை உள்ளடக்கியதாக அமைந்து மக்களுக்கும் வருங்கால சந்ததியினருக்கும் ஓர் அடையாளமாகக் காணப்படுகின்றது என்பது நாம் அனைவரும் பெருமைப்பட வேண்டிய விடயமாகும்.

புங்குடுதீவு மக்கள் தமது வாழ்வியலோடு கலை, கலாசாரம் பேணும் ஒரு சமுதாயமாய் விளங்குவதோடு அவற்றை பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் சமுதாய மேடைகள் ஆகியவற்றின் மூலம் அரங்கேற்றி பேணிப் பாதுகாத்து வருகின்றனர். இம் மக்களது கல்வி, கலை இலக்கிய தாகத்திற்கு தீனி போடும் ஒரு நிலையமாக இவ்வரங்கு காணப்படுகின்றது.

மேலும், பிரபல வர்த்தகரும், புங்குடுதீவு கண்ணகை அம்மன் ஆலய அறங்காவலர் சபை உறுப்பினருமான அமரர் சி. கு. செல்லையா அவர்களின் நினைவாக அவரது புதல்வனும், பிரபல வர்த்தகருமான உயர்திரு. செ. மகேந்திரன் அவர்களால் ஞாபகார்த்த பொது மண்டபம் ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டு இன்று மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்படுகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தற்போது இவ்வரங்கில் உபசரணை மற்றும் வகுப்புக்களுக்கான மண்டபங்கள் என்பனவும் காணப்படுவதுடன் ஐம்பதிற்கும் மேற்பட்ட சமய மற்றும் சமூக நிகழ்வுகள், கூட்டங்கள் என்பவை இவ்வரங்கத்தில் இடம்பெற்றமை மட்டுமல்லாமல் தையல் வகுப்புக்கள், கணினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வகுப்புக்கள் போன்றனவும் மக்களின் வாழ்வாதார அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு இடம்பெறுகின்றன. அத்துடன் பாடசாலை மாணவர்களின் மேலதிக கற்றல் நடவடிக்கைக்கான கல்வி நிலையமாகவும் இலவச சேவையை இவ்வரங்கம் வழங்கி வருகின்றது.

கலைப்பெரு மன்றம் மற்றும் அம்பலவாணர் அரங்கமானது அவற்றின் அர்ப்பணிக்கப்பட்ட சேவை காரணமாக புங்குடுதீவு பிரதேசத்தின் மனிதவள அபிவிருத்திக்கும், சமூக பொருளாதார அபிவிருத்திக்கும் பங்களிக்கும் ஒரு இடமாக விளங்குகின்றது. எனவே இனி வரும் காலங்களிலும் இவற்றின் சிறப்பான பணி புங்குடுதீவு வாழ் அனைத்து சமூகத்தினருக்கும் தொடரவும், சேவைகள் பன்மடங்கு பெருகவும் இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்தி நிற்கிறேன்.

**இ. இளங்கோவன்**
ஆளுநரின் செயலாளர். வட மாகாணம்
தலைவர் - புங்குடுதீவு கலைப்பெருமன்றம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



ஈழத்திருநாட்டின் வடபால் அமைந்துள்ளது சப்த தீவுகள். இத்தீவுகளில் நடுநாயகமாக அமைந்துள்ளது புங்குடுதீவு கிராமமாகும். அறநெறி ஓங்கச் சிவநெறியில் ஈடுபாடு கொண்ட மக்கள் வரலாற்றுக்காலம் தொட்டு இம்மண்ணை மகத்துவப்படுத்தியுள்ளனர் புங்குடுதீவுக் கிராமத்தில் உள்ளூரில் உள்ள பெரியார்கள் ஒன்று கூடி 1976ம் ஆண்டு கலைப்பெருமன்றம் ஒன்றினை ஸ்தாபித்து கலைவளர்ச்சியை முன்னெடுத்துச் சென்றனர். தீவக இடம்பெயர்வு காரணமாக கலைப்பெருமன்ற செயற்பாடுகள் சற்று தடைப்பட்டு பின்னர் மீண்டும் புத்துயிர் பெற்றது.

மீண்டும் புத்துயிர் பெற்ற கலைப்பெருமன்றமானது 2017ம் ஆண்டு சித்திரை மாதம் புங்குடுதீவு கிராமத்தின் கலை, பண்பாட்டு விழுமியங்களை முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் புலம்பெயர் உறவுகள் பலரின் நிதியுதவிகள் மூலம் நவீனவடிவில் வடிவமைக்கப்பட்ட அம்பலவாணர் கலையகத்தை அமைத்து புங்குடுதீவு கிராமத்திற்கே பெருமை சேர்த்துள்ளனர் என்பது பெருமைக்குரிய விடயமாகும். பல நோக்கங்களுடன் கூடிய இக்கலையரங்கத்தில் முத்தமிழ் நிகழ்வுகள் மட்டுமன்றி ஒவ்வொரு கிராமத்து உறவுகளும் தங்களது பலகருமங்களை நிகழ்த்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதுடன், தற்போது கைத்தொழில் பயிற்சி, வாழ்வாதாரப்பயிற்சி, கலைகள் தொடர்பான பயிற்சி நெறிகள் போன்றன நடைபெற்று வருகின்றமை வரவேற்கத்தக்க வி டயமாகும்.

இவ்வாறு தமது சேவையினை ஆற்றிவரும் கலைப்பெருமன்றம் 22.04.2018 ஆம் திகதி தனது முதலாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்வடைவதுடன் மன்றத்தின் வளர்ச்சியில் தமது உழைப்பை அர்ப்பணித்த அன்புள்ளங்களுக்கு எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. அ. சோதிநாதன்**
பிரதேச செயலர்
வேலணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



ஈழமணித் திருநாட்டின் வடபால் கந்தபுராண கலாசாரம் மிளிர்ந்தோங்கும் யாழ் மாவட்டத்தின் ஓர் அங்கமாக அமைந்துள்ள தீவகமண் கலைகளை வளர்ப்பதிலும் அவற்றைப் பேணுவதிலும் இன்றும் தனது வரலாற்றுக் கடமையை செவ்வனே ஆற்றிவருகின்றது. கலையும் கலைஞர்களும் மிளிரவேண்டியது காலத்தின் தேவையாக இருக்கின்ற இக்காலப்பகுதியில் உள்ளூர் மற்றும் புலம் பெயர் நாடுகளில் வாழும் தீவகப் பெருமக்களின் ஒற்றுமையின் பயனாக ஓர் ஒன்றிணைந்த படைப்பாக புங்குடுதீவு கலைப் பெருமன்றத்தின் முயற்சியால் கலையரங்கம் நிறுவப்பட்டுள்ளது.

இக்கலையரங்கமானது புங்குடுதீவு மண்ணினை யாழ்நகருடனான ஆபத்தான கடல் வழித் தொடர்புகளிலிருந்து மீட்டு தரைவழியாக இணைத்து புங்குடுதீவு, நயினாதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய தீவுகள் பெருவளர்ச்சியடைவதற்கு பெரும் பங்காற்றிய அம்பலவாணர் சகோதரர்களை நினைவுகூர்ந்து நிறுவப்பட்ட இவ்வரங்கானது இப்பிரதேச மக்களினது நன்றியுணர்வையும் புலப்படுத்தி காட்டுகின்றது.


இவ்வூர்க் கலைஞர்களுக்கான கலையின் இதயமாக அமைக்கப்பட்ட **வாணர் கலையரங்கம்** தனது கலைப்பயணத்தில் ஓராண்டு தூரத்தினை வெற்றியோடு கடந்து விழாக்காணும் இவ்வேளையில் அதன் சிறப்புகளை தாங்கி வெளிவரும் இம்மலர் பல்வேறு செய்திகளைத் தாங்கி தொடர்ந்தும் வெளிவர நிறைவான இறையருள் கிடைக்கவேண்டி எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி மஞ்சுளாதேவி சதீஷன்**
பிரதேச செயலர்,
ஊர்காவற்றுறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்க உம் சேவை



வாணர் சகோதரர்களின் நினைவாக நிறுவப்பட்ட கலையரங்கத்தின் ஒருவருட பூர்த்தியை புங்குடுதீவு கலைப்பெருமன்றம் விழா எடுத்துக் கொண்டாடுவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். கூடவே திரு. செல்லையா மகேந்திரன் அவர்களின் அன்பளிப்பாக இன்னொரு பொது மண்டபமும் நிறுவப்பட்டு அதனது திறப்பு விழாவும் இடம்பெறுவதையிட்டு இலண்டன் வாழ் புங்குடுதீவு மக்களின் சார்பாகவும் எனது சார்பாகவும் பாராட்டுதல்களையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலையரங்க வளாகத்தில் நடைபெற்றுவரும் கவின்கலை கணினி, தையல், கணிதம், ஆங்கிலம் போன்ற துறைகளில் மாணவர்களுக்கான வகுப்புகள் பல நல்ல உள்ளங்களின் நிதி உதவிகளுடன் நடைபெறுவதையும் அறிந்துவருகின்றேன். சிறுவர்களுக்கான பூங்காவும் சிறப்பாக இயங்குவதைக் கேள்விப்பட்டேன். இவ்வகையில் சமூக சேவையை நோக்காகக் கொண்டு அயராது இயங்கிவரும் கலைப்பெருமன்ற நிர்வாகிகளையும் அவர்களுக்குத் துணையாய் உள்ளோர்களையும் இச் சந்தர்ப்பத்தில் வணங்கி நிற்கின்றேன்.

நமது புங்குடுதீவு மண் பொலிவுறவும் அங்குவாழ் மக்கள் சகல துறைகளிலும் முன்னேற்றமடையவும் வேண்டுமென்பதே புலம்பெயர்ந்த எம்போன்றவர்களின் கனவும் ஆசையுமாகும். விவசாயம், வர்த்தகம், மீன்பிடித்துறை, கல்வி, கலை, ஆன்மீகம், விளையாட்டுத்துறை, போன்றவற்றில் நமது ஊர்மக்கள் சிறந்து விளங்கிய காலம் ஒன்று இருந்தது. அதனை நாம் மீண்டும் உருவாக்கவேண்டும். நமது ஊர் மக்கள் பெரும் மதிப்புடனும் புகழுடனும் மகிழ்ச்சியாய் வாழும் காலத்தை எல்லோரும் சேர்ந்து உருவாக்கி பாடலும் ஆடலுமாய் அவர்கள் வாழும் காட்சியை நாமும் பார்த்தும் பகிர்ந்தும் அனுபவிக்க வேண்டும். அதற்காய் கலைப்பெருமன்றம் அயராது உழைக்க புலம் பெயர்ந்த எம் மக்களின் ஒத்துழைப்பு என்றும் இருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.

**முருகேசு நேமிநாதன்**
சட்டத்தரணி,
புங்குடுதீவு 12,
இலண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



2017 ஆம் ஆண்டு புதுவருடத்தில் நிர்மாணிக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்ட அம்பலவாணர் கலையரங்கத்தின் முதலாம் ஆண்டு செயற்பாடானது நிறைவு பெற்று இரண்டாம் ஆண்டில் காலடி வைக்கும் நிகழ்வினைக் கொண்டாடி மகிழும் கலைப்பெருமன்றத்தின் சேவையினைப் பாராட்டுவதுடன் அவர்களது சேவை தொடர வாழ்த்துகின்றேன்.

கடந்த 30 வருட கால யுத்தம் 2009 ஆம் ஆண்டு மௌனித்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணக் குடாநாட்டில் மூலைமுடுக்குகளெல்லாம் ஆடம்பரமான திருமண மண்டபங்கள், பொது மண்டபங்கள் எனத் தனியாராலும் அரசினராலும் கட்டப்பட்டு வருகின்றன. ஆனால் பல நோக்கங்களுடன் கூடியதான நேர்த்தியான மண்டபங்கள் தீவுப்பகுதியில் கட்டப்படாத நிலையைக் காணமுடிகின்றது. இந்நிலையறிந்து புங்குடுதீவு கலைப்பெருமன்றத்தின் உள்நாட்டு மற்றும் உலகளாவிய உறவுகள் இக்கலையரங்கத்தினை நிர்மாணித்ததன் மூலம் புங்குடுதீவு மக்கள் மட்டுமல்லாது தீவக மக்களும் நிச்சயம் பயன் பெறுவர் என்பதில் ஐயமில்லை. அதுவும் தோணிகளில் பயணம் செய்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்குச் சென்ற அவலநிலையினை உணர்ந்து வாணர் பாலத்தினை முன்னின்று உருவாக்கிய பெருமைக்குரிய அம்பலவாணர் சகோதரர்களின் நினைவாக நிர்மாணிக்கப்பட்ட கலையரங்கமானது. கிராமத்தின் வரலாற்றைத் தற்போது வாழ்ந்து வரும் மக்களுக்கு உணர்த்தியமையானது பெருமைக்குரிய விடயமாகும்.

புங்குடுதீவு கிராமத்தில் நிறுவப்பட்ட கலையரங்கத்தினை இவ்வூர் மக்கள் தமது சொந்த நிகழ்வுகளாயினும் சரி, பொது நிகழ்வுகளாயினும் சரி, உரிய முறையில் பயன்படுத்துவதன் மூலமே இக்கலையரங்கம் நீண்டுநிலைக்கும். இது மட்டுமல்லாது கலைப்பெருமன்றம் தொழில் வாய்ப்பற்றவர்களுக்கான கணினிப் பயிற்சி, தையல் பயிற்சி, நுண்கலைப்பயிற்சி என்பவற்றையும் மாணவர்களின் மேம்பாடு கருதி தனியார் வகுப்புக்களையும் இவ்வளாகத்தில் நடாத்தி பல நோக்குடனான அபிவிருத்தியையும் மேற்கொண்டு வருகின்றனர். எனவே மக்கள் நலன் கருதி கலையரங்கமும் அதனோடு இணைந்த முயற்சிகளும் வெற்றிபெற எனது அன்புடன் கூடிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மா. தியாகராசா**
சட்டத்தரணியும் ஜே.பி.யு எம்மும்
பிரசித்தநொத்தாரிசுவும்
ஆனைக்கோட்டை - புங்குடுதீவு - 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



கலை, பண்பாட்டு விழுமியங்களை மேம்படுத்தும் பொருட்டு புங்குடுதீவு கிராமத்தைச் சேர்ந்த புலம் பெயர் தேசங்களிலும் உள்நாட்டிலும் வாழ்ந்துவரும் நல்லுள்ளம் படைத்தவர்களால் தீவகத்தில் பொருளாதார சமூக பண்பாட்டு வளர்ச்சிக்காக தம்மை ஆகுதியாக்கிய அம்பலவாணர் சகோதரர்களின் நினைவாக கலையரங்கம் ஒன்றினை நிறுவி 14.04.2017ம் திகதி திறந்து வைக்கப்பட்டமையானது வரலாற்றுச் சிறப்பு மிக்க செயலாகவே காணப்படுவதுடன் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். அத்துடன் கலையரங்கம் செயற்படத்தொடங்கி ஓராண்டு பூர்த்தியினைக் கொண்டாடும் முகமாக 22.04.2018 ஆம் திகதி ஆண்டு நிறைவு விழாவினை கலையரங்க நிர்வாகிகள் கொண்டாடவிருப்பது மன்றத்தின் வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாகும்.

கலைப்பெருமன்ற நிர்வாகிகள் குறிப்பாக இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கம் அவர்களும் அவர் தம் குழுவினரும் மேற்குறித்த செயற்றிட்டத்தினை முன்னெடுத்துச் செல்வதற்கு மிகப்பெரிய கடின உழைப்பினை நல்கியுள்ளனர். அவருக்கும் அவரது நிர்வாகக் குழுவினருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலையரங்கத்தில் குறிப்பாக கல்விச் செயற்பாடுகள் மற்றும் பொதுவான செயற்பாடுகளை மேம்படுத்தும் பொருட்டு பொதுமண்டபம் ஒன்றின் தேவைகருதி என்னுடன் திரு. பொன். சுந்தரலிங்கம் அவர்கள் கலந்துரையாடியதன் விளைவாக அந்தப் பொது மண்டபத்தைக் கட்டித்தருவதாக உறுதியளித்து அதனை ஆண்டு நிறைவு விழாவில் எனது பிறந்த மண்ணில் இயங்கும் கலைப்பெருமன்றத்திற்கு கையளிக்கும் பாக்கியம் எனக்கு கிட்டியதில் மகிழ்வெய்துகின்றேன். இதனை நிர்வாகத்தினர் உரிய முறையில் பயன்படுத்துவார்கள் என நம்புகின்றேன்.

கலையரங்கம் மற்றும் மண்டபங்களை, வசதி படைத்தவர்கள், நல்லுள்ளம் கொண்டவர்களின் உதவியுடன் நிறுவ முடியும். ஆனால் எந்த நோக்கத்திற்காக நிறுவப்பட்டதோ அதனை எய்துவதற்கு கிராமத்து மக்களின் குறிப்பாக இளம் சமூகத்தினரின் பங்கு பற்றலிலேயே தங்கியுள்ளது. அதற்கான செயற்றிட்டங்களை நிர்வாகத்தினர் முன்னெடுப்பார்கள் என நம்புகிறேன். மலர் சிறக்கவும் ஆண்டு நிறைவு விழா இனிதே நிகழவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செ. மகேந்திரன்**

உரிமையாளர்,

கருணா ஸ்ரீல் கொழும்பு. மலாயன் கபே யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவையொன்று காணும் ஓராண்டுகலைவிருட்சம்



"கலையில் நீ திகழ்ந்தால் மலையும் உன்னை திரும்பிப்பார்க்கும்
மலையில் நீ இருந்தால் சிலையாய் உன்னை வடிப்பர்"

என்ற கூற்றிற்கிணங்க கலையினை ஊட்டி விட்டு அம்மன்றத்திலே சிலையாக எழுந்து நிற்கின்ற அம்பலவாணர்களை ஒரு கணம் எண்ணிப்பார்க்கும் போது உண்மையில் சந்தோசமாக இருக்கிறது. அன்றைய காலங்களிலே கலைப்பணியைச் செய்து இன்று புங்கை கலைமக்களின் மனங்கள் வழியே அவர்கள் திருநாமம் ஓடி ஓராண்டைப்பூர்த்தி செய்யும் அளவிற்கு வந்துவிட்டது.

இந்தக் கலைப்பெருமன்றம் ஆரம்பித்த நாள் முதல் இன்றுவரை இதன் நிகழ்வுகளைப் பெருமையாகப் பார்க்கிறேன். அந்த வகையிலே ஆண்டு ஒன்றிலே கால்பதித்து நிற்கும் அம்பலவாணர் கலைப்பெருமன்றமானது ஓராண்டைப் பூர்த்தி செய்யும் இதேவேளை கலையுடன் கிராமத்தின் அபிவிருத்திகளிலும் முன்னின்று செயற்படும் தலைமைத்துவத்தையும் வரவேற்கிறேன்.

அத்துடன் கலைப்பெருமன்றத்தின் ஊடாக வழிகாட்டல், ஆலோசனைகள், நிர்வாகக் கட்டமைப்புக்கள் என்பன திறம்பட ஆற்றப்படுகின்றதென்பதை நன்கறிவேன். இத்தகைய செயற்பாடுகளைக் கண்டு நான் பிறந்தமண் எனப் பெருமை கொள்கிறேன். அந்தவகையிலே எல்லாம் வல்ல இறையாற்றல் கருணையினால் வேதாத்திரி மகரிஷி அவர்களின் நல்லாசிகளோடு அனைவரையும் வாழ்க வளமுடன் என வாழ்த்தி மகிழ்கின்றேன்.


வாழ்க வளமுடன்!!!

**மனவளக்கலை பேராசிரியர்**
**அருள்நிதி சி. முருகானந்தவேல்.**
அறிவுத் திருக்கோவில்,
இல. 81, பிறவுண் றோட், கொக்குவில், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



கடந்த வருடம் 2017 சித்திரைத் திங்கள் திறப்புவிழாக் கொண்டாடப்பட்ட அம்பலவாணர் கலையரங்கம் 2018 சித்திரைத் திங்கள் 22ல் தனது முதலாம் ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்த ஒரு வருடத்தில் இக் கலையரங்க நிர்வாகத்தினர் பல செயற்றிட்டங்களை செய்திருப்பதனைப் பார்த்து பெருமிதம் அடைகின்றேன். இக் கலையரங்கமானது எமது ஊரில் வாழும் எதிர்கால இளைய தலைமுறையினர்க்கும் எம் மக்களுக்கும் ஓர் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்றால் மிகையல்ல.

அத்தோடு இம் முதலாம் ஆண்டு நிறைவில் பிரத்தியேக வகுப்பறைகளுக்கான பிறிதோர் அழகிய மண்டபமும் கட்டடத்திறப்பு விழா நடைபெறுவதனையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இம் மண்டபத்தினை தமது தந்தையாரின் ஞாபகார்த்தமாக அமைத்துதவிய தொழிலதிபர் செல்லையா மகேந்திரன் அவர்களையும் வாழ்த்துவதில் பெருமிதம் அடைகிறேன்.

எம் மக்கள் நன்றி மறவாதவர்கள் என்ற பெருமைக்கு எடுத்துக்காட்டாக இக் கலையரங்கம் பல பயன்தரும் திட்டங்களுடன் செயற்பட்டு வருவது பாராட்டிற்குரியது. அவர்களின் பணி மென்லேும் சிறக்கவும், ஆண்டுவிழா இனிதே நிறைவு பெறவும் எல்லாம் வல்ல பரம் பொருளின் பாதம் பணிந்து எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கோபு மதிவாணன்**
பிரான்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையரங்கத்தின் பணிகள் தொடர வாழ்த்துக்கள்



அம்பலவாணர் கலையரங்கம் ஓராண்டு சேவையினைப் பூர்த்தி செய்து முதலாம் ஆண்டு நிறைவு விழாவினை இன்று கொண்டாடுவதையிட்டு பெருமை கொள்ளும் அதேவேளையில் முதலாம் ஆண்டு நிறைவு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

நீண்டதோர் வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட புங்குடுதீவுக்கு யாழ்ப்பாண வரலாற்றிலே தனித்துவமான ஒரு வரலாறு உண்டு. அந்த வரலாற்றுப் பாதையில் தடம் பதித்துச் சென்றவர்கள் தான் எங்கள் வாணர் சகோதரர்கள். இவர்களை நினைவு கூருமுகமாக அமைக்கப்பட்ட இக்கலையரங்கம் எம்மண்ணின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை மீண்டும் கட்டியெழுப்பும் வகையில் பல்வேறு செயற்றிட்டங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்தி வருகின்றமையைக் கண்டு பூரிப்படைகின்றேன்.

இயற்கையோடு ஒன்றிணைந்த கிராமிய வாழ்வின் இன்பங்களை அனுபவித்து வாழ்ந்தவர்கள் நாங்கள். ஆனால் இன்று அவற்றைத் தொலைத்துவிட்டு உலகெங்கிலும் தேடிக்கொண்டிருக்கின்றோம். போரினால் பொலிவிழந்த எம்கிராமத்தின் மீளுருவாக்கத்தில் இக்கலையரங்கமும் இணைந்து செயலாற்றி வருகின்றமையைப் பாராட்டுவதோடு, இதன் பணிகள் தொடர்வதற்கு புலம்பெயர்வாழ் உறவுகளின் உதவிகள் தொடர வேண்டுமெனவும் இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**இராசமாணிக்கம் இரவீந்திரன்**
சுவிற்சர்லாந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்தின் வளர்ச்சிப்பாதையில்
# வாணர் கலையரங்கம்



புங்குடுதீவுக் கிராமம் 1991ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்தநிலைமாறி தற்போது சமூக, பொருளாதார மாற்றங்களுக்குட்பட்டு பயணித்துக் கொண்டிருப்பதைக் கடந்த மூன்று தசாப்த காலமாக கிராம அதிகாரியாகவிருந்த எனக்கு நன்றாகவே தெரியும். தற்போது முன்பிருந்த சமூகக் கட்டமைப்பு பெருமளவில் மாற்றமுற்று வந்துள்ளது. இந்நிலையில் சமூக, பண்பாட்டு மேம்பாட்டினை மீளவும் கட்டி எழுப்பும் நோக்கத்துடன் புலம்பெயர் உறவுகளும் உள்ளூர் நலன்விரும்பிகளும் இணைந்து மிகப் பெரிய நிதியினைக் கொண்டு வாணர் கலையரங்கம், கலாசார மண்டபம், பொது நோக்கு மண்டபம் என்பவற்றை நிர்மாணித்து பெரிய நிறுவனமாகப் பர்ணமித்துள்ளது. எனவே எமது கிராம மக்கள் இக்கலையரங்கூடாக கலை பண்பாட்டு வளர்ச்சி கருதி இணைநது செயற்பட்டு எதிர்காலக் கிராமம் பல்வேறு வழிகளில் வளம் பொருந்தியதாக அமையச்செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

1977ஆம் ஆண்டு வாணர் திறந்த வெளியரங்கு நிறுவப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை கலைப்பெருமன்றத்தின் வளர்ச்சி நிலையை அறிந்தவன் என்ற நோக்கில் அதனை விரிவுபடுத்த வேண்டும் என்று கருதி கலைப்பெரு மன்ற நிர்வாகிகள் என்னையும் இணைந்து செயற்படுமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பல்வேறு சிரமத்தின் மத்தியிலும் முகாமையாளராகக் கடமையாற்றுவதற்கு சம்மதித்து செயற்பட்டு வருகின்றேன்.

பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியிலும் கலைப்பெருமன்ற கனடா மற்றும் தாயக நிர்வாகிகளின் சிறப்பான வழிகாட்டலால் கலையரங்கச் செயற்பாடுகள் செவ்வன நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் கலையரங்க ஓராண்டு நிறைவு விழா சிறப்புற வாழ்த்துவதுடன் பல்லாண்டுகள் எமது கிராமத்திற்கு அளப்பரிய சேவையாற்ற வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**கு. சந்திரா**
ஓய்வுநிலை கிராம அதிகாரி,
முகாமையாளர், கலைப்பெருமன்றம்,
புங்குடுதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



கலையுலக வாழ்வென்பது புங்குடுதீவு மக்களோடு பின்னிப்பிணைந்தது. குருகுலக் கல்வி முறையில் இருந்த புராதன காலத்திலும் சரி, புலம்பெயர்ந்து சிதறுண்டு திசையெங்கும் பறந்து, பரந்து வாழும் இன்றைய நிலையிலும் சரி, கலை என்பது எமது இரத்தத்தோடு கலந்தே இருக்கிறது. ஆய கலைகள் அறுபத்திநான்கிலும் எம்மவர்கள் திசையெங்கும் காட்டும் அதீத திறமை உலகில் புங்குடுதீவு மக்களுக்கு ஒரு உயரிய இடத்தைத் தந்திருக்கிறது. கலை எம் மக்களோடு இரண்டறக் கலந்ததற்கு காரணம் புங்குடுதீவில் உள்ள கல்விச்சாலைகளும், ஆலயங்களும், சனசமூக நிலையங்களும், கலா மன்றங்களும் எம் மண்ணின் மைந்தர்களுக்கு வழங்கிய பங்களிப்பே ஆகும்.

அந்தவகையில் வாணர் கலையரங்கம் கலை இலக்கிய ரீதியில் எம்மவர்கள் உயர்ந்துவர கடந்த காலங்களில் தனது பங்களிப்பை வழங்கி இருந்தது. காலத்தடத்தில் நாம் இடம் பெயர்ந்து வெளியேற வாணர் கலையரங்கில் பன்முக பங்களிப்பும் அங்கு அதற்கான சரியான வழிநடத்தலும் வளங்களும் மக்கள் தொகையும் இல்லாத காரணத்தால் பின்னடைவை சந்தித்தது, சென்ற ஆண்டு எம் பெரியோர்கள் எடுத்த பெரு முயற்சியினால், உலகளாவிய புங்கை உறவுகளினதும், நட்புக்களினதும் பங்களிப்பில் வாணர் கலையரங்கம் சகல வசதிகளுடனும் புதுப்பொலிவு பெற்று மீண்டும் தனது கலை இலக்கிய சேவையோடு பல்வேறு உதவிகளையும் செய்யத் தொடங்கியது.

தீவக மக்களின் பெருவாழ்வுக்காய் அவர்களது போக்குவரத்துச் சுமைகளைப் போக்கிய அன்றைய இலங்கையிலேயே நீளமான தாம்போதியை தங்கள் பெரு முயற்சியினால் அமைத்துக் கொடுத்த புங்குடுதீவின் பெருந்தகைகளின் நாமம் தாங்கி, அவர்களது உருவச்சிலைகளை அரங்கின் முகப்பில் தாங்கி சிறப்பாக இந்த அம்பலவாணர் கலையரங்கம் புதுப்பொலிவு பெற்றிருக்கிறது. இந்தப் பெரும்பணிக்காக ஒன்றியத்தின் சார்பில் நாங்கள் எங்கள் ஒத்துழைப்பை நல்கியிருந்தோம். இந்த முயற்சியில் முன்னின்று உழைத்த இசைவேந்தர் கலைப்பெருமன்றத்தின் செயற்றிட்டத் தலைவர் பொன். சுந்தரலிங்கம் ஐயா அவர்களையும், திரு. ச. சதாசிவம் அதிபர் (கிளி மாஸ்ரர்) அவர்களையும், நாங்கள் எங்கள் 20ம் ஆண்டுவிழாவுக்கு சிறப்பு விருந்தினராக அழைத்து உரிய கௌரவத்தையும் கொடுத்து, இந்தப் பெரும்பணிக்கு எங்களது தார்மீக ஆதரவையும் வழங்கியிருந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்பதில் என்றும் தணியாத தாகத்தோடு ஊர் உறவுகளுக்காக எங்களை அர்ப்பணித்து நிற்கும் இந்தவேளையில் *22.04.2018* இல் அம்பலவாணர் கலைப்பெருமன்றம் ஆண்டுவிழாக் காணும் இந்தப் பொன்னான வேளையில் சுவிசில் இருந்து புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியத்தின் சார்பாக எங்கள் வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"நம் கடன் பணி செய்து கிடப்பதே"

நன்றி வணக்கம்

**சொக்கலிங்கம் ரஞ்சன்**


தலைவர்,

சுவிஸ் புங்குடுதீவு

மக்கள் விழிப்புணர்வு ஒன்றியத்தின் சார்பில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே





எம் முந்தையரோடு எந்தையும்
தாயும் இன்பமாய் வாழ்ந்து
எமையும் வளர்த்தெடுத்து
வாழ்வில் உயரவைத்த
வனப்பு மிகுந்த எங்கள் கிராமம் தனை
இடையில் குறுக்கிட்ட போர்த்தீயின்
சுவாலை தகர்த்து
மீண்டும் பொலிவுடன்
அதே மிடுக்குடன்
இழந்தவை அனைத்தையும்
மீண்டும் கோர்க்கும்
உன்னத பணியிலே
அம்பலவாணர் எனும்
அரும்கொடையின் பெயரிலே
கண் தூங்கும்வேளை கூடக் கனவிலும் மறவா
எங்கள் மண்ணினை நினைந்து
மண்டபம் அமைத்து
மேலும் எண்ணிய பணிகள் யாவும்
ஏற்றமாய்ச் செய்யும் வண்ணம்
பண்ணிடும் பணிகள் யாவும் பயனுற எமதூர் மக்கள்
திண்ணமாய் வழிகள் கூறித் திறத்துடன் உதவி செய்தோர்
அத்தனை பேர்க்கும் என்றென்றும் நன்றி கூறி
வாழ்த்தி வணங்கி நிற்கின்றோம்.

**புங்குடுதீவு மக்கள் ஒன்றியம்,**
**சார்பாக பிரான்ஸ்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டுதனிலே ஓவியமாய் எழுந்த கலைப்பெருமன்றம்





நாற்புறமும் கடலோசை ரீங்காரமிடத் பூமித்தாயை முத்தமிட்டுச் செல்கின்ற அலையருகே கலையருவியைச் சொரிந்த வண்ணம் கற்பகதரு ஒன்று புங்கை மண்ணிலே எழுந்து நிற்கிறது. அந்தவகையிலே அகவை ஒன்றிலே காலடித்தடம் பதிக்கும் கலைப்பெருமன்றம் காலம் உள்ளவரை வாழ வேண்டும் என வாழ்த்தி நிற்கிறோம்.

தமிழர்களின் பண்பாடுகளையும் கலாசாரங்களையும் அழிந்து போக விடாது இயல், இசை, நாடகம் மூலம் கட்டிக்காக்கப்படுகின்றது. இதன்மூலம் மாணவரிடையே இலைமறை காய் போல் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர இது ஓர் சிறந்த களமாக அமைகிறது. அத்துடன் இக்கலைப்பெருமன்றத்தினை அகவை ஒன்று காணும் வரை கனடாவிலிருந்து வழி நடாத்திக் கொண்டிருக்கின்ற இசைமன்னன் பொன்சுந்தரலிங்கம் மற்றும் நெறியாள்கை வழியே செப்பனிட்டுக்கொண்டிருக்கிற நல்லாசான் சண்முகம் சதாசிவம் அவர்களோடு கலைப்பெருமன்றத்தினைக் கட்டிக்காக்கின்ற சிறந்த உள்ளங்களையும் இந்நாளிலே வாழ்த்தி நிற்கிறோம்.

அதுமட்டுமன்றி ஊரிலே இருக்கின்ற சிறார்களை கலைத்துறையிலே ஈடுபடுத்தி எல்லோருக்கும் கலைக்கல்வி வாய்ப்பு அளிக்கப்பட்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறோம். இனிவரும் காலங்களிலும் இவ்வாறான கலைக்கல்வியினை எம் தீவக சிறார்களுக்கு ஊட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் இந்த அம்பலவாணர் கலைப்பெருமன்றமானது இரு உள்ளங்களை இணைத்து வைத்த ஒரு சிறந்த களமாகவும் ஏனைய நிகழ்வுகளையும் இக்கலையரங்கத்திலே நிகழ்த்தலாம் என்ற விழிப்புணர்வையும் ஏற்படுத்திக் கொடுக்கிறது. ஒவ்வொரு மாணவருக்கும் தன் திறமையை வெளிக்கொணர இது துணை புரிகிறது. அந்தவகையிலே சென்ற வருடம் **2017** ஆம் ஆண்டுதனிலே எங்களுடைய தொண்டர் திருநாவுக்கரசு கலை இலக்கியமன்ற சிறார்களுக்கு வில்லிசை நிகழ்வினை நிகழ்த்திக்காட்டுவதற்கு சந்தர்ப்பமளிக்கப்பட்டிருந்தது. அதே போல் இவ்வருடமும் சமூக விழிப்புணர்வு நாடகம் ஒன்றினை அளிக்கை செய்வதற்கும் சந்தர்ப்பமளிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் இக்கலைப்பெருமன்றத்தினை சிறந்த வழிகாட்டல்களோடு, தலைமை தாங்கி ஒற்றுமையையும், கலையையும் நிலவச் செய்கின்ற தலைமைத்துவப்பண்பானது சிறந்த கட்டமைப்போடு நடுநிலைமை வகித்து செயற்படுத்தும் திறமையால் , நிர்வாக ஒழுங்கு என்றால், அதன் வகிபாகம் என்ன என்பதை வகுத்துக்காட்டி நிற்பதைக்காணக் கூடியதாக உள்ளது.. அந்தவகையில் செயற்பாடுகளை முன்னெடுக்கும் தலைவர் மற்றும் செயலாளர் உட்பட அனைத்து நிர்வாகத்தினருக்கும் மற்றும் கலைப்பெருமன்றத்தினை எதிர்காலக் கனவுகளோடும் அனைத்து நல்லுள்ளங்களும் நலமுடனும் வளமுடனும் நீடுழி வாழ வேண்டுமென்று எல்லாம் வல்ல எம்குருநாதன் சிவயோகசுவாமிகளின் பாதார விந்தங்களை வேண்டி நிற்கின்றோம்.

*வாழ்க வளமுடன்!!*

**க. புஸ்பமணி**
நிலையப் பொறுப்பாளர்
வட இலங்கை சர்வோதயம்.

**பொ. ஜமுனாதேவி**
அறங்காவலர்.
வட இலங்கை சர்வோதயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி
ஒன்றியம் ஜேர்மனி
Pungudutivu Thondar Thirunavukkarasu Sarvodayam
Unterstützung Verein. Germany.
Pungudutivu Thondar Thirunavukkarasu Sarvodayam
Welfare Association. Germany.

1

என்னெப்பெற்றால், ஜேர்மனி
16.03.2018

## வாணர் புகழ் வானுயர...

வாணர் அரங்கம் 22.04.2018 இல் தன் ஓராண்டு பூர்த்தியைக் கொண்டாடுவதையிட்டு மனமகிழ்ச்சியடைகின்றோம். புங்கையூர் மக்கள் புலத்தில் தம் வாழ்வியலை அமைத்துக் கொண்டாலும் தம் தாய்க்கிராமமான புங்கையூரை மறவாமல் நன்றியுடன் வாழ்கின்றனர் என்பதற்கு உதாரணம் தான் வாணர் அரங்கம்.

வாணர் சகோதரர்கள் புகழ் வானுயர்ந்தது என்பதை உலகமறியும். அந்தப் பெருமைக்கு மணிமகுடம் சூட்டியது போல் இவ்வரங்கம் அவர்கள் பெயராலே அமையப்பெற்றுள்ளது. இவ்வரங்கத்தை அமைத்து புங்கை மண்ணின் பெருமைக்கு பெருமை சேர்த்த உங்கள் அனைவரையும் இப் புகழ் சாரும்.

பல நல்ல மனிதர்களையும் பண்பாளர்களையும் தந்த எம் மண் இன்று உலகப் பந்தில் முக்கியத்துவம் பெறுமளவுக்கு எம்மவர் உலக அரங்கில் சாதனைகள் மூலம் நிலைநாட்டி வருகின்றனர். எம் பாரம்பரிய கலைகள் அழிந்துபோகாமல் நாட்டுப் பாடல்கள் வடிவிலும் கூத்துக்கள். வில்லிசைகள், நாடகம், நடனம் போன்ற கலைகள் மூலம் மிளிர்வதற்கு உங்களைப் போன்றோர் வடிகால் அமைத்துக் கொடுத்திருப்பது பாராட்டப்பட வேண்டிய விடயம்.

தனித்தீவாகத் திகழ்ந்த புங்குடுதீவு மண்ணை அனைத்து ஊர்களுடனும் இணைந்து பாலம் அமைத்து எல்லா மக்களுடனும் ஓர் ஒருமைப்பாட்டை உருவாக்கி விட்டவர் வாணர் சகோதரர்கள் அவர்கள். அவர்கள் பெயராலேயே அவர்பால் கொண்ட அன்பால் கற்றோர் பலர் இணைந்து கருத்துடன் உருவாக்கிய இவ்வரங்கம் நம் எதிர்கால சந்ததியினரை நல்ல கலைஞர்களாக உருவாக்கும் என்பதில் எந்த ஐயப்பாடுமில்லை. அத்துடன் எம் மக்களின் மங்கல நிகழ்வுகளை நடாத்தவும் விழாக்களைக் கொண்டாடவும் உதவிடும் என்பது மனமகிழ்வைத்தருகின்றது.

உதவிடும் உள்ளங் கொண்டோர் பற்பல செயற்பாடுகள் மூலம் தம் தாய் மண்ணைக் கட்டியெழுப்புவர். இது காலத்தின் கட்டாயம். எம் புங்கையூர் மண்ணை வளமாக்கப் பாடுபட்டவர்களில் முன்னாள் வட இலங்கை சர்வோதயத்தின் அறங்காவலர் அமரர் கந்தையா திருநாவுக்கரசரும் ஒருவர்.

அவர்வழி தொடரும் நாம், இன்று உங்கள் அளப்பெரிய சேவையினை மனமாரப் பாராட்டுகின்றோம். இன்று புலம்பெயர்ந்து எம் உறவுகள் சிதறி வாழ்ந்தாலும் தம் தாய்மண்ணுக்கொரு தேவையெனில் மழைக்கு முன்வரும் மண்வாசனை போல் முன்னின்று உதவிடுவார்கள். இதுதான் தொப்புள்கொடி உறவென்பது. இது என்றென்றும் எம் மண்ணுடன் தொடரும்.

இப்பாரிய பணியைச் சிறப்பித்துச் செய்து முடித்து இன்று ஓராண்டு பூர்த்தியைக் கொண்டாடும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியத்தின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

| | | |
|---|---|---|
| சி. சதானந்தன் | க. மகாலிங்கம் | ஜெ. கேதீஸ்வரன் |
| தலைவர் | அமைப்பாளர் | செயலாளர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



தாம்போதியின் உறுதியும் கலையரங்கின் நிமிர்வும் அழகும் அம்பலவாணர் சகோதரர்கள் இன்றும் எங்களோடு வாழும் பெருமிதத்தை தருகிறது !

வாழும் போது சாதனை மனிதர்களாய் வலம்வந்து எம் சமூகத்துக்குக்கு மட்டுமன்றி தீவக உறவுப்பாலத்தை மேம்படுத்த ஒரு நிஜமான பாலம் அமைத்து தீவக மக்களினதும் முழு இலங்கை மக்களினதும் போக்குவரத்தை இலகுவாக்கிய வாணர் சகோதரர்கள் என்றென்றும் மக்கள் மனங்களின் வாழும் நீங்காத உத்தம புருஷர்கள். இவர்கள் புங்கை மண்ணில் அவதரித்தது எம் அனைவருக்கும் மிகவும் பெருமையைத் தருகிறது. ஒரு ஊரின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பது கல்வி, கலை, கலாசாரம், மருத்துவவசதி, போக்குவரத்துவசதி மற்றும் தொடர்பாடல் என்பனவாகும். இந்த துறைகளை வளர்த்து எம்மக்களின் வளர்ச்சியை மேம்படுத்தியவர்கள் எம் முன்னோர்கள். அன்று அவர்கள் எமக்கு கொடுத்த அந்த துறைசார் வளர்ச்சியின் மூலமே இன்று புங்கை மைந்தர்கள் உலக அரங்கில் முன்னணியில் பல துறைகளிலும் இருக்கின்றார்கள்.

எமது வாழ்வுக்காக தங்கள் உதிரத்தை, வியர்வையை சிந்திய அந்த பெரியவர்கள் வரிசையில் வாணர் சகோதரர்களை நினைவுபடுத்தி புங்கை மைந்தர்களின் கலை வளர்ச்சியை மேம்படுத்த எழுந்த கலையரங்கம் இன்று புதுபொலிவு பெற்று மிகவும் அழகான கட்டிட அமைப்புடன் பெரியவாணர், சின்னவாணர் இருவரினதும் சிலைகளை முன்றலில் தாங்கி சிறப்பாக அமைந்திருப்பது எம் அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது. முதலாவது புலம்பெயர் சங்கமாக புங்குடுதீவு மலாயா ஐக்கிய சங்கத்தை நிறுவி அன்று புங்கை மக்களுக்கு உதவிய பெருந்தகைகளின் பெயர் தாங்கி இந்த கலையரங்கு சிறப்பாக அமைவதற்கு இன்றைய புலம்பெயர் புங்குடுதீவு சங்கங்கள், ஒன்றியங்கள், அமைப்புக்கள் உறவுகள் பெருந்தொகை நன்கொடை செய்திருப்பதில் உவகை கொள்ளும் அதேவேளை, அன்று ஊருக்கும் உலகிற்கும் உதவிய பெருந்தகைகளுக்கு உரிய கௌரவத்தை கொடுத்து கலையரங்கு அமைத்து சிறப்பித்து இன்று நன்றிக்கடன் செய்திருக்கும் உறவுகளை நினைத்து பெருமிதம் கொள்வதோடு அவர்களுக்கு எனது நல்வாழ்த்துக்களையும் நன்றிகளையும் கூறிக்கொள்கின்றேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*15, 04 .2017* ம் ஆண்டு புதுப்பொலிவுபெற்ற கலையரங்கு இன்று முதலாவது ஆண்டு விழா காணும் நேரத்தில் விழாவை மெருகூட்ட அமைப்பாளர்கள் வெளியீடு செய்யும் ஆண்டுவிழா மலரில் தாயகம் அமைப்பின் சார்பிலும் எனது சார்பிலும் எனது நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு சந்தர்ப்பத்தை தந்த அமைப்பாளர்களுக்கு எங்களது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**திருமதி. சுலோசனாம்பிகை தனபாலன்**
தலைவர்.
"தாயகம் சமூக சேவையகம்" புங்குடுதீவு.
உபசெயலாளர்.
புங்கடுதீவு கலைப்பெருமன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையரங்கத்தின் தேவைகருதி செயற்பட்ட அனைவருக்கும் நன்றிகள்



எனது அன்பார்ந்த உறவுகள் அனைவர்க்கும் எனது அன்புகலந்த வணக்கங்கள் உரியதாகுக அம்பலவாணர் கலைப் பெருமன்றத்தினை உருவாக்கத் தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை புலம் பெயர்தேசங்களில் வாழும் உறவுகளாகிய நீங்கள் அளப்பரிய உதவிகளைச் செய்ததன் காரணத்தினால் இன்று எம்மண்ணில் அழகியதோர் அம்பலவாணர் சகோதரர்களின் உருவச் சிலைகளும் கம்பீரமான தோற்றத்துடன் காணப்படுவதை நாம் காண்கின்றோம். 2016 இல் மீள் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட கலைப்பெருமன்றம் தனது (42)நாற்பத் திரண்டாவது அகவையில் கால்பதித்துள்ளது. கடந்தவருடம் (2017)சித்திரைத்திங்கள் இருநாட்கள் கோலாகலமாக தனது மண்டபத் திறப்புவிழாவைக் கொண்டாடியமை யாவரும் அறிந்ததே. ஆண்டு ஒன்று உருண்டோடி இப்போது மீண்டும் சித்திரைத்திங்கள் (22)ல் முதலாம் ஆண்டு விழாவினைக் கொண்டாடுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த ஓராண்டில் எமது நோக்கங்கள் பலவற்றை நிறைவு செய்துள்ளோம். அவற்றைச் செய்து முடிப்பதற்கு அனுசரணையாக இருந்தவர்கள் நீங்களே அந்த வகையில் அதன் பெருமை உங்களனைவர்க்குமே உரியது. கலைப்பெருமன்றத்தில் கவின்கலைகள் உட்பட ஆங்கிலம், கணிதம், தையற்பயிற்சி, கணணிப்பயிற்சி என்பன போதிக்கப்பட்டு வருகின்றது. கடந்த வருடத்தில் எம்மண்டபத்தினை பலகலாசார நிகழ்வுகளும் அரச உத்தியோகத்தர் பொது மக்கட்கான கலந்துரையாடல்கள் சமய சம்பந்தமான நிகழ்வுகள் என பன்முகத் தேவைகட்கும் பயன்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது

யா/புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலய முன்னாள் அதிபர் அமரர் சோமசுந்தரம் சேனாதிராசா அவர்களின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட இரட்டைமாடிக் கட்டிடத்தில் தனது நோக்கத்தை நிறைவுசெய்யும் வகையில் தையற்பயிற்சி, கணணிப்பயிற்சி ஆகியன தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. முதற் தொகுதி மாணவர்கள் தமது பயிற்சியினை நிறைவு செய்து இரண்டாவது தொகுதி மாணவருக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. இக்கட்டிடத்தை தமது தந்தையாரின் நினைவாக அவரது மைந்தன் சே.சந்திரலிங்கம் அவர்களே அமைத்துத் தந்ததோடு மட்டுமல்லாமல் இங்கு நடைபெறும்தொழிற் பயிற்சிக்கான முழுச் செலவீனங்களையும் அவரே பொறுப்பேற்று செய்து வருகின்றார் என்பது குறிப்பிடத்க்கது. அவரின் இந்த பரந்த மனப்பாங்கினையும் சமூக சேவையினையும் மனதாரப் பாராட்டுகின்றேன்.

மற்றும் (M.S.S. Foundation) மாகோ சின்னத்தம்பி சின்னத்தங்கம் பௌவுண்டேசனால் ஆதரவற்ற திறன்சார் மாணவர்களுக்கு மாதாந்தம் வழங்கப் பட்டுவரும் ஊக்குவிப்புப்பணமும் ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கட்கு வழங்கப்பட்டுவரும் புலமைப்பரிசில்களும் பல்கலைக்கழகத்தில் கல்விபயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கொடுப்பனவுகளும் கலைப் பெருமன்றத்தினூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்னிசை வேந்தர்

# பொன் சுந்தரலிங்கம்

தலைவர் : கலையரங்க கட்டட நிர்மாணக்குழு கனடா

தலைவர் : அம்பலவாணர் கலையரங்க அறங்காவலர் சபை

தலைவர் : இளங்கலைஞர் மன்றம் கனடா

போசகர் : கலைபெருமண்றம் புங்குடுதீவு

போசகர் : இளங்கலைஞர் மன்றம் யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது. இதனை வழங்கி வரும் (MSS) பௌவுண்டேசன் நிறுவனர் சின்னத்தம்பி கனகலிங்கம் அவர்கட்கும் அவருக்கு அனுசரணையாகவிருந்து வரும் குடும்பத்தவர்க்கும் எமது மனம் நிறைந்த பாராட்டுக்கள்.

எம் கலைப்பெருமன்றத்தில் நடை பெறும் பாடங்களைக் கற்பிப்பதற்கும் கலாசார நிகழ்வுகளுக்கான விருந்துபசாரங்களைச் செய்வதற்குமான பன்முகத்தேவைகொண்ட மண்டபம் ஒன்று எங்களுக்கு அத்தியாவசியத் தேவையாயிருந்தது. இதைக் கருத்தில் கொண்டு எமது மண்ணின் மைந்தரும் தொழில் அதிபருமான தம்பி செல்லையா மகேந்திரன் அவர்களை அணுகியபோது எவ்வித மறுப்பும் இன்றி மனப்பூர்வமாக தமது தந்தையாரின் ஞாபகார்த்தமாகச் செய்து தருவதற்கு சம்மதம் தெரிவித்தார். அதைத்தொடர்ந்து மிகக் குறுகிய காலத்தினுள் மண்டபமும் கட்டி முடிக்கப்பட்டு இன்று அம் மண்டபமும் திறந்து வைக்கப்படுவதனையிட்டு இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகின்றேன். அத்தோடு தம்பி மகேந்திரன் அவர் தம் பாரியார் இருவரதும் மண்பற்றினையும் சமூக சேவையினையும் மனதார பாராட்டுகின்றேன்

மண்டபம் கட்டத்தொடங்கிய காலத்தில் இருந்து இன்று வரை எம்மோடு சேர்ந்து நிர்வாகத்தினரும் ஓய்வின்றி இயங்கிய காரணத்தினால் இப்பெரு அறுவடையைச் முடிந்ததென்றால் மிகையல்ல. அத்துடன் இவ்வருடத்தில் கட்டிடத்துக்கான பாக்கிப்பணம் முழுவதும் செலுத்தி முடிக்கப்பட்டது நிரந்தர வைப்பு நிதியத்தினை முப்பத்தியாறு இலட்சத்தில் இருந்து ஐம்பது இலட்சமாக அதிகரித்துள்ளோம். மற்றும் மாதாந்த மின் கட்டணத்தினை (சுவிஸ்) பாலசிங்கம் சாந்தி அவர்கள் செலுத்தி வருகின்றார். கற்பிக்கப்படும் பாடங்களுக்கான ஆசிரியர் வேதனத்தினை மாதாந்தம் வழங்குவதற்கு பல அன்பர்கள் தாமாக முன்வந்து செலுத்தி வருகின்றனர். இவ்வருட ஆண்டு விழாவில் தீவகப்பாடசாலைகளுக்கிடையேயான கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி ஆகியவற்றினை நடாத்தி அவற்றில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்குவதற்கு தமது தந்தையாரின் ஞாபகார்த்தமாகச் செய்வதற்கு கோபாலபிள்ளை தீபன் அவர்கள் முன்வந்திருந்தார். ஆனால் தவிர்க்க முடியாத காரணங்களினால் இச் செயற்றிட்டத்தினை முன்னெடுக்க முடியவில்லை. இவ்வாறாக பல நல்லுள்ளம் படைத்த அன்பர்கள் பலபணிகளைப் பொறுப்பெடுத்துச் செய்து வருகின்றனர் அவர்கள் அனைவரையும் மனம் நிறைந்து பாராட்டுகின்றேன். அவர்களின் பெயர் விபரங்கள் அனைத்தும் பிறிதொருகட்டுரையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் செய்து முடிப்பதற்கு எம்மோடு கரம் சேர்த்துச் செயற்பட்ட கலைப்பெருமன்றத் தலைவர் இலட்சுமணன் இளங்கோவன் அவர்களையும் செயலாளர் பேராசிரியர் கார்த்திகேசு குகபாலன் அவர்களையும் பாராட்டுவதற்கு வார்த்தைகளே இல்லை தமது நேரகாலத்தினையும் பொருட்படுத்தாமல் பல சிரமங்களின் மத்தியில் தாய் மண்ணின்மீது கொண்ட பற்றினால் தமது சேவையினை நல்கி வருகின்றனர் அவர்கள் சேவையினையும் சமூகப்பணியினையும் மனதாரப் பாராட்டுகின்றேன். அதே போல் தம்பி குமாரசாமி சந்திரா முன்னாள் கிராமசேவையாளர் அவர்கள் முகாமையாளராக இருந்து சேவை புரிந்து வருகின்றார். அவரோடு சேர்ந்து அங்குள்ள நிர்வாக உறுப்பினர்கள், கலைப்பெருமன்ற ஊழியர்கள், ஆசிரியர்கள் கல்விகற்கும் மாணவர்கள் பெற்றோர்கள் அனைவரும் இணைந்து கரம் கோர்த்துச் செயற்பட்டு வருகின்றனர். அவர்கள் அனைவர்க்கும் எனது பாராட்டுக்கள் உரியதாகுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து நாம் செயற்படுத்தும் திட்டங்கள் எல்லாம் தமது வினைத்திறனால் குறுகிய கால எல்லையினுள் மிக நேர்த்தியாகவும் அழகாகவும் அமைத்துத்தரும் தம்பி துவாரகனையும் அவரோடு சேர்ந்த கட்டிடக் கலைஞர்களையும் மனம் நிறைந்து பாராட்டுகின்றேன் இவற்றோடு மொத்தமாகப் பார்க்கும் போது சுற்றுமதில் முழுவதையும் மிக அழகாக அமைத்துத்தந்த கோபாலபிள்ளை மதிவாணன் அவர்களையும் இரட்டை மாடிக்கட்டிடத்தை கம்பீர தோற்றத்தோடு அமைத்துத் தந்த சேனாதிராசா சந்திரலிங்கம் அவர்களையும் பொதுமண்டபத்தை அழகுற அமைத்துத் தந்த செல்லையா மகேந்திரன் அவர்களையும் மனம் நிறைந்து வாழ்த்துகின்றேன்

ஒட்டுமொத்தமாக இவை அனைத்தினையும் செய்து முடிப்பதற்கு இது காலவரை நாம் உங்களை அணுகிய போதெல்லாம் எதுவித மறுப்பும் இன்றி உதவிய அத்தனை பேரையும் மீண்டும் வாழ்த்தி வணங்குகின்றேன். இத்துடன் எங்கள் அம்பலவாணர் கலையரங்கம் சார்பாக புலம்பெயர் தேசங்களில் வாழும் நீங்கள் உதவ விரும்பினால் நேரடியாக அங்கு இருக்கும் நிர்வாகத்தினரோடு தொடர்புகொண்டு பங்களிப்புச் செய்யலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். உங்களின் ஒத்துழைப்பு அவர்களுக்க நிச்சயம் பேருதவியாக அமையும். இது உங்கள் சொத்து. உங்களில் ஒருவனாக இருந்து உதவுவதில் யானும் பேருவகையடைகின்றேன். இதுவரை எம்மையும் எமது நிர்வாகக் குழுவினரையும் தன்னம்பிக்கையோடு ஏற்று பலகோடி ரூபா பெறுமதியான செயற்றிட்டத்தினைச் செய்து முடிக்க ஒத்துழைப்பு நல்கிய உங்கள் அனைவரையும் மீண்டும் ஒருமுறை வாழ்த்தி வணங்கி நன்றிகூறுகின்றேன்.

**இன்னிசை வேந்தர்**
**பொன். சுந்தரலிங்கம்.**
தலைவர், கலையரங்க கட்டட நிர்மாணக்குழு, கனடா.
போசகர், கலைப்பெருமன்றம், புங்குடுதீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பலவாணர் கலையரங்கக் கட்டிட நிர்மாணக்குழு 2016 - 2017



இருப்பவர்கள் (இ-வ): திரு. சி. கனகலிங்கம், பொன். சுந்தரலிங்கம் (தலைவர்), சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராசக்குருக்கள் (போஷகர்), திருமதி சத்தியவதி சங்கரலிங்கம்

நிற்பவர்கள் (இ-வ) : திரு. ந. தர்மபாலன் (மக்கள் தொடர்பாளர்) திரு. என்.கே. மகாலிங்கம், திரு. சே. சந்திரலிங்கம் (பொருளாளர்), திரு. செ. சபாரெட்ணம், திரு. ச. சதாசிவம் (செயலாளர்)

படத்தில் இல்லாதவர்கள் : திரு. த. இரத்தினராஜா, சிவஸ்ரீ தியாக முருகானந்தக்குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த ஓராண்டு கால கலைப் பெருமன்றத்தின் செயற்பாடுகள்

புங்குடுதீவு கிராமத்தின் புகழ் பூத்தகல் விமான்கள் வர்த்தகர்கள் இளைஞர்களின் முயற்ச்சியின் பயனான 1976ம் ஆண்டு புங்குடுதீவு கலைப் பெருமன்றம் ஸ்தாபிக்கப்பட்டது இதன் முக்கிய குறிக்கோளாக புங்குடுதீவு வேலணை கடற்கபாதையினை முன்நின்று வழிநடாத்தி பூர்த்தி செய்த அம்பலவாணர் சகோதரர்களை நினைவு கூர்ந்து கிராமத்தின் கலை பண்பாட்டினை வளர்த்தெடுத்தற்பொருட்டு செயற்படுவதேயாகும் என்பதாகும். இதனை மேம்படுத்தும் முகமாக திறந்த வெளி அரங்கினை அமைத்து 1977 ஆம் ஆண்டு 3 நாட்கள் பெரும் விழா எடுத்து கொண்டாடப்பட்டது. ஆரம்பத்தில் இம் மன்றம் சிறப்பாக செயற்பட்டு வந்த போதிலும் நாட்டில் ஏற்பட்டிருந்த அசாதாரண சூழ் நிலைகளின் விளைவாக 1980களைத் தொடர்ந்து படிப்படியாக செயலிழந்து செல்லும் நிலை உருவானது. 1991ம் ஆண்டு இக்கிராமத்தில் இருந்து ஒட்டுமொத்த மக்கள் வெளியேற்றத்தினால் முற்றாக செயலிழந்து காணப்பட்டிருந்தது.

1996ம் ஆண்டு மிகச்சிறிய எண்ணிக் கையில் மக்கள் மீள்வரவு மேற்கொள்ள தொடங்கவே ஒரு சிலரின் முயற்சியினால் வாணர் திறந்த வெளியரங்கில் முன்பள்ளி, அறநெறிப்பாடசாலை ஆகியன ஆரம்பித்த போதிலும் காலப்போக்கில் அவையும் ஸ்தம்பிதமடையலாயின. 2014ம் ஆண்டு புங்குடுதீவு மண்ணைப்பிறப்பிடமாகக் கொண்ட இன்னிசை வேந்தன் பொன் சுந்தரலிங்கம் அவர்களின் முயற்சியினால் அம்பலவாணர் திறந்த வெளியரங்கவளாகத் தினை புனரமைப்புச் செய்ய ஒருதொகைப் பணத்தினை அனுப்பியதன் விளைவாக வேலைகள் ஆரம்பிக் கப்பட்டன. இந் நிலையில் 2015ம் ஆண்டின் பிற்பகுதியில் எனக்கு கனடாவுக்கு செல்வதற்கான வாய்ப்பு கிட்டியது. அக்காலம்



கனடாவில் பொன் சுந்தர லிங்கம் அவர்களின் தலைமையில் அம்பலவாணர் கலையரங்க மேம்பாடு தொடர்பாக ஆரயப்பட்டுவந்த காலப் பகுதியாகவிருந்தது.

1991ம் ஆண்டு எமது மண்ணில் இருந்து துரத்தியடிக்கப்பட்ட போது வாணர் பாலத்தின் ஊடாக வெளியேறிச்சென்று சர்வதேசம் எங்கும் பரந்து வாழ்ந்து வரும் மக்களில் பெரும்பாலானோர் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர். அவர்களையும் இணைத்து கலைப்பெருமன்றத்தின் செயற்பாட்டினை விரிவு படுத்த எண்ணி கனடாவில் ஒரு ஆலோசனைக்குழுக்கூட்டம் நடைபெற ஏற்பாடகியிருந்தது. அதில் என்னையும் கலந்துகொள்ளவேண்டும் என அழைத்திருந்தனர். அப்போது பங்கு பற்றியோரால் பல்வேறு கருத்துக்கள் பரிமாற்றப்பட்ட நிலையில் புங்குடுதீவில் வாணர் சகோதரர்களின் நினைவாக ஒரு கலையரங்கம் அமைக்கப்படவேண்டும் என முடிவுசெய்யப்பட்டது நிதிப் பொறுப்பினை கனடாவை தலைமை யமாகக் கொண்ட கலைப்பெரு மன்றத்தினர் ஏற்றுக் கொள்வதாகவும் தாயகத்தில் கலைப்பெருமன்றத்தினை மீள இயங்கவைத்து கலையரங்கத்தினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்மாணிப்பதற்கு பொறுப்பாக என்னைப் பணித்தார்கள். அதன் பிரகாரம் தாயகத்தில் திரு.சு.நித்தியானந்தன் திருமதி.த.சுலோசனா திரு.சி.திருலிங்கநாதன் உட்பட பலரை இணைத்து கலைப்பெருமன்ற நிர்வாகசபை அமைக்கப்பட்டது. இதன் ஆலோசகர்களாக திரு இ.இளங்கோவன், பேராசிரியர் கா.குகபாலன் இருவரும் செயற்பட்டனர். ஆரம்பத்தில் கொள்கையளவில் ஏற்றுக் கொண்ட போதிலும் காலப்போக்கில் அதற்கான பொறுப்பில் பெரும் பங்கினையும் சுமக்க வேண்டிய நிலைக்கு உள்ளானேன்.

கலையரங்கம் நிர்மாணித்தல் என்ற விடயம் ஆரம்பிக்கப்பட்ட முதலே அதனை முன்னெடுத்து செல்வதற்கு பல்வேறு தடைக்கற்கள் போடப்பட்டன. அதனைக் கலைப்பெருமன்ற நிர்வாகிகளின் துணையுடன் வெற்றி பெற்று ஏறத்தாழ 10 மாதங்களிலேயே வாணர் கலையரங்கம் நிர்மாணிக்கப்பட்டு **15.04.2017**ம் திகதி திறந்துவைக்கப்பட்டது. இக்கலையரங்கம் தீவகத்தில் மிகப் பெரியதும் வசதிவாய்ப்புக்களுடன் கூடிய ஒன்றாகவிருப்பதானது மிகவும் மகிழ்ச்சி தருவதாகவுள்ளது.

வாணர் கலையரங்கம் மட்டும் இவ்வளாகத்தில் அமைக்கப்படவில்லை தீவுப்பகுதி மாணவர்கள், தொழில் தேடுவோரின் நலன்கருதி புங்குடுதீவில் புகழ்பூத்த அதிபராகவிருந்த அமரர் சோ. சேனாதிராசா அவர்களின் ஞாபகார்த்தமாக அவரது மகன் திரு சே. சந்திரலிங்கம் அவர்களால் பெரும் செலவில் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதில் கணணிவகுப்புக்கள், தையல் பயிற்சி வகுப்புக்கள் என்பன சிறப்பாக நடைபெறுவதுடன் அதற்கான செலவீனத்தையும் அவரே பொறுப் பேற்றுச் செய்து வருகின்றார். அவருக்கு கலைப்பெருமன்றம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளது.

கலைப்பெருமன்றத்தினதும் கலையரங்கத்தினதும் செயற்பாடுகள் படிப்படியாக முன்னேற்றம் அடையலாயின கலையரங்கத்தில் கலைநிகழ்சிகள், அரசநிறுவனங்களின், கிராம அபிவிருத்திக்கான கூட்டங்கள் விவாகங்கள், ருதுசாந்தி நிகழ்ச்சிகள், மத ரீதியான நிகழ்வுகள் என பல நிகழ்வுகள் ஓராண்டு காலத்தில் நிகழ்ந்தேறியுள்ளன. இது மேலும் அதிககரிக்க வாய்ப்புண்டு. புங்குடுதீவு கிராமம் உட்பட தீவகத்திற்கு ஒரு வசதியுடன் கூடிய ஒரு பொது அரங்கம் தேவை என்பதை இக்கலையரங்கத்தின் செயற்பாடுகள் எடுத்துக்காட்டி உள்ளன.

கலையரங்க செயற்பாடுகள் படிப்படியாக வளர்ச்சி பெறவே கலைப்பெருமன்றத்தின் நோக்கத்தினை பூர்த்தி செய்வதற்கு கட்டட வசதி பற்றாக்குறை உணரப்பட்டது. குறிப்பாக மாணவர்களின் மீட்டல் வகுப்புக்களை நடாத்துவதற்கு இடவசதி பற்றாக்குறைகள், விருந்தினரை உபசரிப்பதற்கான இடவசதி இன்மை போன்றவற்றை நிவர்த்தி செய்ய எண்ணி கொழும்பில் பிரபல வர்த்தகரும் கிராமத்தினைப் பிறப்பிடமாக கொண்டவருமான திரு.எஸ். மகேந்திரன் அவர்களுடன் மன்றத்தின் காப்பாளர் திரு. பொன் சுந்தரலிங்கம்அவர்கள் தொடர்பு கொண்டதன் பேரில் அவர் பொதுநோக்கு மண்டபத்தினை தனது சொந்தச் செலவில் கட்டித் தருவதாக வாக்குறுதியளித்து கட்டிய மண்டபமானது இன்று வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது. கலைப்பெருமன்றம் அவருக்கும். அவரது குடும்பத்தினருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றது.

கலைப்பெருமன்றத்தின் கல்விசார் செயற்பாடுகளில் கணணிக்கல்வி, தையற்பயிற்சி, நுண்கலைக்கல்வி என்பன சிறப்பாக நடைபெற்று வருகின்றபோதிலும் மாணவர்கள் வரவு காலத்திற்கு காலம் கூடிக்குறைவதாகவே காணமுடிகின்றது அதேவேளை கணிதம், விஞ்ஞானம், தமிழ்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கான மாணவர்கள் வரவானது ஆரோக்கியமானதாக அமைந்திருக்கவில்லை கிராமத்தில் பல இடங்களில் இலவசமாக தனியார் வகுப்புக்கள் நடைபெற்று வருவதும் ஒரு காரணியாக இருக்கலாம். இருப்பினும் பெற்றோரின் அக்கறையின்மையானது புங்குடுதீவில் கல்வி மேம்பாடடையாது இருப்பதற்குரிய காரணிகளில் முதன்மையாக விருப்பதாக கல்வி யியலாளர்கள் கருத்து தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கலைப்பெருமன்றத்தின் வளர்ச்சியினை கருத்தில் கொண்ட இந்தியத்துணைத் தூதராலயம், கலாசார அலுவல்கள் திணைக்களம், மாகாணசபை உறுப்பினர்களின் உதவிகள் குறிப்பாக நுண்கலை வகுப்புக்கான உபகரணங்கள், மாணவர்களுக்கான வாங்கு மேசைகள் போன்றன அன்பளிப்பாக வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

அம்பலவாணர் கலையரங்க திறப்பு விழாவினை அடுத்து நடைபெற்ற கலைப் பெருமன்ற பொது கூட்டத்தில் தலைவராக வடமாகாணஆளுனரின் செயலாளர் திரு இ. இளங்கோவன் அவர்களும் செயலாளராக ஓய்வு நிலை புவியியற் பேராசிரியர் கா.குகபாலன் அவர்களும் பொருளாளராக வர்த்தகர் திரு. சி.திருலிங்கநாதன் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டு செயற்பட்டு வருகின்றனர் அதே போலவே எதிர் காலத்தில் மன்றமானது தொய்வில்லாமல் தனது சேவையை செய்வதற்காக பதினொரு பேர் கொண்ட "புங்குடுதீவு கலைப் பெருமன்றஅறக்கட்டளை" ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. அறக்கட்டளையின் வழகாட்டலிலேயே கலைப்பெருமன்றம் தனது சேவையை எதிர்காலத்தில் தொடரும்.


கட்டட நிர்மாணக்குழுவின் உறுப்பினர் திரு. சி. கனகலிங்கம் அவர்களின் முயற்சியினால் 11 ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. ப. திருக்குமார் அவர்கள் தனது பெற்றோர்களான பரராசசிங்கம் பரமேஸ்வரி அவர்களின் நினைவாக மிகவும் வறுமைப்பட்டோரின் மரணத்தின் போது அந்திமகால செலவுக்காக ஒரு தொகை நிதியினை வழங்கும் செயற்றிட்டம் கலைப்பெருமன்றத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. நிதியினை தேவைக்கேற்ப வழங்க முன்வந்த திரு. ப. திருக்குமார் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கலைப்பெருமன்றத்தினதும் கலையரங்கத்தினதும் செயற்பாடுகள் செவ்வனே நடைபெறும் நோக்கில் முகாமையாளர், மெய்க்காப்பாளர், இரவுக் காவலாளி என மூவர் நியமிக்கப் பட்டுள்ளனர். முகாமையாளராக ஓய்வுநிலை கிராம அதிகாரி திரு.கு.சந்திரா அவர்கள் பொறுப்புடன் நிர்வகித்து வருகின்றார். கலைப் பெருமன்ற வளாகம் 24 பரப்பு காணியில் அமைந்துள்ளதால் சுற்றுச்சூழல் பாதிப்பில்லாத வகையில் பராமரிப்பதென்பது நிதியுடன் சம்பந்தப்பட்டதாகும். மட்டுப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து அதனை செய்வது என்பது சிரமமானதாக உள்ளது. இதுதொடர்பாக நல்லுள்ளம் படைத்தவர்களின் உதவி தேவைப்படுகின்றது.

**பேராசிரியர் கா. குகபாலன்**
செயலாளர்,
கலைப்பெருமன்றம் புங்குடுதீவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுடன் உங்கள் அனைவருடனும் சில மணித்துளிகள்...



பொது நலம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு எமது மண்ணிற்காகவும், மக்களுக்காகவும் தம் வாழ்வினையே அர்ப்பணித்த புண்ணிய புருஷர்களான வாணர் சகோதரர்கள் ஞாபகார்த்தமாக அமையப்பெற்ற அம்பலவாணர் கலையரங்கம் தனது 42 வது ஆண்டு விழாவைக் கொண்டாடுவதில் பேருவகை அடைகின்றேன். இவ்வரங்கம் அவர்களின் ஞாபகச் சின்னமாக விளங்கிய போதும் இதன் நோக்கங்கள் பரந்துபட்டவை. அவர்கள் வாழ்ந்து காட்டிச் சென்ற பாதையில் எதிர் காலச்சந்ததியினரும் நடைபோட வேண்டும் என்பதை உணர்த்துவதோடு எமது வருங்காலச் சிற்பிகளான சிறார்களை அதற்கு தயார் படுத்துவதற்கான நிலைகளனாகவும் இவ் அரங்கம் திகழ்கின்றது. அதற்கான பல பயன்தரும் திட்டங்களை வகுத்து அதனூடாகப் பயணத்துக்கொண்டிருப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எங்கள் நோக்கங்கள் வெற்றிபெற கரம்கொடுத்து உதவியவர்கள் நீங்களே, அந்த வகையில் அதனால் வரும் பெருமையும் உங்களையே சாரும் இங்கு கற்பிக்கப்படும் பாடங்கள் அனைத்திற்குமான ஆசிரியர்களது மாதாந்த வேதனத்தினை பல நல்லுள்ளங்கள் தமது பெற்றோரின் ஞாபகார்த்தமாக வழங்கி வருகின்றனர். அவர்களது சமூகப்பணி வரவேற்கத்தக்கது. ஊர்ச்சங்கங்கள் என்ற வரிசையில் சுவிஸ் மக்கள் விழிப்புணர்வு ஒன்றியமானது வயலின் பாடத் திற்கான மாதாந்த வேதனத்தினை வழங்கி வருகின்றது அந்நிர்வாகத்தினருக்கு எமது நன்றிகள் உரியதாக.

பயிற்சி நெறிகள் என்ற வகையில் தையற்பயிற்சி, கணணிப்பயிற்சி ஆகிய இரு பயிற்சி நெறிகளையும் சேனாதிராசா சந்திரலிங்கம் அவர்களே தமது செலவில் செய்து வருகின்றார் அவர் தமது தந்தையார் சேனாதிராசா அவர்களின் ஞாபகார்த்தமாக அழகிய இரட்டை மாடிக்கட்டிடத்தை அமைத்துத் தந்ததுமல்லாமல் தொடர்ந்து அவ் ஆசிரியர்களுக்கான வேதனத்தினையும் வழங்கி வருவதனையிட்டு கலைப்பெருமன்றம் தனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது. மற்றும் மாகோ சின்னத்தம்பி சின்னத்தங்கம் (M.S.S Foundation) பௌண்டேசனால் வழங்கப்பட்டு வரும் சேவைகள் யாவும் எமது கலைப்பெருமன்றத்தினூடாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. காலத்தின் தேவை கருதி வழங்கப்பட்டுவரும் உதவி ஞாலத்தின் மாணப்பெரிது என்பதற்கிணங்க இப்பணியினைச் செய்துவரும் சின்னத்தம்பி கனகலிங்கம் அவர்களையும் அவருக்கு அனுசரணையாக இருந்துவரும் அவர்தம் குடும்பத்தினரையும் மனதாரப் பாராட்டுகின்றோம். இங்கு நடைபெறும் பாடங்களைக் கற்பிற்பதற்கான இடவசதி கருதி இன்னொருமண்டபத்தினை அமைக்கும் முகமாக எமது மண்ணின் தொழில் அதிபர் செல்லையா மகேந்திரன் அவர்களை அணுகினோம். அவர் மிகுந்த சந்தோசத்தோடு தமது தந்தையாரின் ஞாபகார்த்தமாக அழகியதோர் பெரிய மண்டபத்தை அமைத்துத் தந்துள்ளார். அவருக்கும் அவர்தம் குடும்பத்தவர்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடன வகுப்பு



சங்கீத வகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைப் பெருமன்றம் சார்பான வாழ்த்துக்களும் நன்றிகளும் உரியதாக.

செயலாளர் என்ற வகையில் யான் இங்கு ஒரு சிலரை நினைவுகூரக் கடமை பட்டுள்ளேன். எங்கள் கட்டிட நிர்மாணக் குழுவில் உள்ளவர்கள் இன்றுவரை முழுமையான அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றமை பாராட்டிற் குரியது. அவர்களை வாழ்த்துவதற்கு வார்த்தைகளே இல்லை எனலாம். குறிப்பாக எங்களுக்கு தலைமை ஏற்று எம்மை எல்லாம் வழி நடாத்திவரும் பொன். சுந்தரலிங்கம் அவர்கள் அரங்கம் அமைப்பதற்கான அங்குரார்ப்பண கூட்டம் தொடங்கிய நாளில் இருந்து இன்றுவரை அதே வேகத்தோடு செயற்பட்டு எம்மையும் இயக்கி வருகின்றமையைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது . அவரால் அவரின் இசையால் எமது பூர்வீக கிராமம் பெருமையடைந்துள்ளது. என்றால் மிகையல்ல. எனவே எங்கள் கிராமத்தின் தவப்புதல்வன் அவரை எம்மண்ணிற்கு ஈந்த இறைவனுக்கும் அவர்தம் பெற்றோர்க்கும், அவரின் செயற்பாடுகளுக்கு உறுதுணையாகவும், உந்து சக்தியாகவும் விளங்கும் தர்மபத்தினியார் சங்கீதபூஷணம் இரஞ்சனா அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தவர்க்கும் கலையரங்கம் சார்பான நன்றிகளும் வாழ்த்துக்களும் உரியதாகுக. அத்தோடு எமது பொருளாளர் சே. சந்திரலிங்கம் அவர்களும் தொடர்ந்து எங்கள் கூட்டங்கள் கூட்டுவதற்கு இடமும் தந்து பல்சுவை விருந்தும் தந்து உபசரிப்பதோடு மட்டுமல்லாது பொருளாதார ரீதியிலும் தனது பங்களிப்பிற்கும் அப்பாலும் உதவி வருவது குறிப்பிடத்தக்கது. அவர்க்கும் அவர்தம் குடும்பத்தவர்ககும் கலைப்பெருமன்றம் சார்பாக நன்றிகள் . மற்றும் எங்கள் நிர்வாகக் குழுவினர்களான த. இரத்தினராசா ந. தர்மபாலன், சி. கனகலிங்கம், செ. சபாரெத்தினம், N.K மகாலிங்கம் திருமதி சங்கரலிங்கம் சத்தியவதி ஆகியோர் தமது நேரகாலத்தினை கருத்திற்கொள்ளாது இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அவர்களது சேவை உள்ளத்தினை மனம் நிறைந்து பாராட்டுகின்றேன். அடுத்து கலையரங்கத்தின் மாதாந்த மின்சாரக் கட்டணத்தினை செலுத்தி வரும் சுவிஸ் திரு. திருமதி பாலசிங்கம் சாந்தி அவர்களை கலைப்பெருமன்றம் சார்பாகப் பாராட்டுவதோடு நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

புலம் பெயர்தேசங்களில் இருந்து நாம் இவற்றைச் செய்தபோதும் இவற்றை நடைமுறையில் செயற்படுத்துகின்ற கலைப்பெருமன்ற நிர்வாகத்தினரின் பணி அளவிடக்கரியது குறிப்பாக தலைவர் இலட்சுமனன் இளங்கோவன் செயலாளர் கார்த்திகேசு குகபாலன் ஆகிய இருவரதும் பணி சொல்லில் அடங்காது . எத்தனையோ பாரிய வேலைப்பழுக்களின் மத்தியில் எம்மண்ணின் சேவையே பெரிது என்ற மனப்பாங்குடன் கலைப்பெருமன்றத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்று சீரும் சிறப்புமாக நடத்தி வருகின்றமை அவர்கள்தம் தாய்க்கு நிகராக தாய் மண்ணையும் நேசித்து வருகின்றமையை வெளிப்படுத்துவதாயுள்ளது. அவர்களுக்கு எங்கள் வாழ்த்துக்களும் நன்றிகளும் உரியதாக. அதே போல் செயலாளர் பேராசிரியர் கார்த்திகேசு குகபாலன் அவர்களும் அன்று தொட்டு இன்றுவரை அரங்கின் செயற்பாடுகளில் ஓய்வின்றி ஓடி ஓடி உழைத்துவருபவர். பல்வேறு சமூக வேலைத்திட்டங்களில் தம்மை இணைத்துக் கொண்டுள்ள போதும் அதற்கும் மேலாக கலைப் பெருமன்றத்தின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இயங்கி வருகின்ற பெருந்தகை அவரை மனதார வாழ்த்துகின்றோம்.

அத்தோடு எங்கள் வேண்டு கோளை ஏற்று முகாமையாளராகக் கடமை புரிந்து வரும் முன்னாள் கிராம சேவையாளர் குமாரசாமி சந்திரா அவர்களையும் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களையும் இந்நேரத்தில் நன்றியுடன் வாழ்த்துகின்றோம். தம் நேரகாலத்தினையும் பொருட்படுத்தாது சமூக அர்ப்பணிப்புடன் கல்வி போதித்து வரும் ஆசிரியர்கள் அத்தனை பேரையும் மனதார பாராட்டுகின்றோம். இவர்களின் அர்ப்பணிப்புகள் எங்கள் மண்ணிற்கு எதிர்காலச் சிற்பிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கித்தரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. கலையரங்கத்தில் கடமை புரிந்து வரும் ஊழியர்கள் தமது வீடாகவே இதனைக் கருதி முழு அர்ப்பணிப்புடன் கடமை புரிந்து வருகின்றமை போற்றுதற்குரியது. இங்கு கல்வி கற்றுவரும் எதிர்கால சிற்பிகள் அவர்களுக்கு உந்து சக்தியாக விளங்கும் பெற்றோர்கள் அனைவரையும் பாராட்டுகின்றோம். இவர்களின் அர்ப்பணிப்புக்கள் எங்கள் மண்ணில் எதிர்காலச் சிற்பிகளை உருவாக்கித் தரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

கலையரங்கத்தில் எல்லாவற்றிற்கும் மேலாக எங்கள் வேண்டுகோளை ஏற்று எமக்கெல்லாம் அவ்வப்போது உதவிக் கரம் நீட்டிய கனடா, சுவிஸ், பிரான்ஸ், ஜேர்மனி, லண்டன் போன்ற நாடுகளில் வாழும் அனைத்து நல்லுள்ளங்களையும் வாழ்த்தி வணங்குகின்றோம். அத்தோடு கலையரங்கம் கட்டத் தொடங்கிய நாளிலிருந்து இன்றுவரை எங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து முழு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு அனைத்து வேலைகளையும் மிக அழகாகச் செய்து முடித்துத் தரும் தம்பி துவாரகன் அவர்களை இத் தருணத்தில் பெருமையுடன் நினைவு கூருகின்றோம். பல விட்டுக் கொடுப்புகளுடன் எம் மண்ணிற்காகத் தமது தாத்தா வ. இராசையா அவர்களின் நினைவாக (22) இருபத்தியிரண்டு இலட்சத்திற்கும் அதிகமான தொகையினை S.T.R Construction நிறுவனத்தின் சார்பாக வழங்கி இருக்கின்றார். அவரது பரந்த மனப்பான்மையினையும் சமூகப் பணியினையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இம் மண்டபம் அமையப் பெற்றதிலிருந்து எம் மக்கள் பல விதங்களில் பயன் அடைந்திருக்கின்றார்கள். உண்மையில் அதை நினைந்து பெருமையடைகின்றோம். இன, மத பேதங்களைக் கடந்து இம் மண்டபம் எல்லோர்க்கும் பொதுவானதொரு பொதுச் சொத்து என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகின்றோம். எத்தனையோ நல்லுள்ளம் படைத்தவர்கள் எம்மோடு தொடர்பு கொண்டு ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கி வருகின்றார்கள். அதற்கு நாங்கள் தலை வணங்குகின்றோம். இது உங்களுடைய சொத்து. இதன் வளர்ச்சியும் செயற்பாடும் உங்கள் கரங்களிலேயே தங்கியுள்ளது. எதிர் வரும் காலங்களில் கலைப்பெரு மன்ற நிர்வாகத்தினரோடு நீங்கள் நேரடியாகத் தொடர்புகளைப் பேணுவதன் மூலம் உங்கள் உறவுகளை வளர்த்துக் கொள்ளமுடியும் என்பதையும் இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். இக்கலைப் பெருமன்றம் எம் மண்ணிற் பிறந்த ஒவ்வோரு மக்களினதும் சொத்தாகும். இதனைப் பேணிப் பாதுகாப்பது உங்கள் கடமையெனக் கூறிக்கொண்டு அன்புடன் தங்கள் அனைவரையும் வணங்கி விடைபெறுகின்றேன்.

**ச. சதாசிவம்**
செயலாளர்.
கலையரங்கக் கட்டட நிர்மாணக்குழு கனடா.
உபசெயலாளர் கலைப்பெருமன்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணனிப் பயிற்சி கூடம்



தையல் பயிற்சி நிலையம்



கலையரங்க உட்புறத்தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று நாம் காணும் கலைப்பெருமன்றம்



"நன்றி மறப்பது நன்றன்று" என்பதற்கிணங்க எவ்வித கைமாறும் கருதாத நிலையில் பொது நலம் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு தாம்பிறந்த மண்ணிற்கு பாலம் அமைத்த அம்பலவாணர் சகோதரர்களை கௌரவிக்கும் முகமாக அமைக்கப்பட்ட திறந்தவெளி அரங்கை உள்ளரங்கமாக மாற்றி இரண்டுநாட்கள் பெருவிழா எடுத்திருந்தமை யாவரும் அறிந்ததே. ஆண்டு ஒன்று உருண்டோடி 2018 சித்திரைத் திங்கள் 22ம் நாள் விழாவினைச் சிறப்பாக கொண்டாடுவதனையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். 1977ல் அமைக்கப்பட்ட திறந்தவெளி அரங்கம் காலத்தின் கோலத்தினால் சீராக இயங்க முடியாதபோதும் தற்பொழுது பன்மடங்கு சிறப்புகளுடன் தலைநிமிர்ந்து நிற்பதோடு மட்டுமல்லாது அம்பலவாணர் சகோதரர்கள் வாழ்ந்து காட்டிய வாழ்க்கைப் பாதையில் பயணிப்பதையிட்டு இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த வருடம் எங்கள் கலையகம் மீண்டும் இயங்கத்தொடங்கிய நாளில் இருந்து இன்று வரை எவ்வளவு வேலைத்திட்டங்கள் இடம் பெற்றிருக்கின்றது என்பதை செயற்திட்டங்கள் அடங்கிய கட்டுரையில் நீங்கள் காணலாம். உண்மையிலேயே கடந்த ஒருவருட காலத்தினுள் அதன் பயன்பாட்டைப் பார்க்கும் பொழுது நானும் எனது குழுவினரும் கலையரங்கம் அமைத்ததற்கான அறுவடையைப் பெற்றுவிட்டோம் எனத் துணிந்து கூறலாம். இன்னும் பல்வேறு வேலைத்திட்டங்களை நாம் மேற்கொள்ளவுள்ளோம்.

இங்கு கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் சீராக நடைபெற்று வருகின்றது. எனது பெற்றோர் ஞாபகார்த்தமாக எம்மால் கட்டப்பட்ட சேனாதிராசா தெய்வநாயகி கலாசார மையம் ( Senathirajah Theivanajaki Cultural Centre) தனது தொழில் பயிற்சி நெறிகளான தையற்பயிற்சி, கணணிப்பயிற்சி ஆகியவற்றைத் தொடர்ந்து செய்து வருவது குறிப்பிடத்தக்கது. இங்கு முதல் தொகுதி மாணவர்கள் தமது பயிற்சி நெறியினை முடித்து இரண்டாம் தொகுதி மாணவர்கள் தமது பயிற்சியினை தொடர்ந்து வருகின்றனர் என்பதையும் இந்நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரியத்தருகின்றேன். இப்பணியினைச் செய்வதற்கு வாய்ப்பளித்த இறைவனையும் எனது பெற்றோரையும் இச் சந்தர்ப்பத்தில் வாழ்த்தி வணங்குகின்றேன்.

கலையரங்கினை நிர்வகிப்பதற்காக தொடங்கப்பட்ட அறக்கட்டளை 36 இலட்சத்தில் இருந்து (50) ஐம்பது இலட்சமாக நிரந்தர வைப்பு நிதியத்தினை உயர்த்துகின்றது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரியத்தருகின்றேன். இதுவெல்லாம் புங்கைத்தாயின் குழந்தைகளாகிய உங்களது அறுவடையே. எனவே எல்லாப்புகழும் உங்களையே சாரும் இக்கலையரங்கம் புங்குடுதீவு மக்கள் அனைவரதும் பொதுச் சொத்து இதன் பயன்பாடு அனைத்து தீவக மக்களுக்கும் புலம்பெயர் தேசங்களில் வாழும் மக்களுக்கும் உரியது. புலம்பெயர் தேசங்களில் வாழும் மக்கள் தங்களின் கொண்டாட்டங்களை எமது மண்ணில் சிறப்பாகவும் மகிழ்வுடனும் கொண்டாடி மகிழ்ந்திட இக் கலையரங்கம் தங்களை அன்புடன் வரவேற்கின்றது. என்பதையும் இந்நேரத்தில் கூறிவைக்க விரும்புகின்றேன்.

எங்கள் கலையரங்கத்தில் மாகோ சின்னத்தம்பி சின்னத்தங்கம் பௌண்டேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(M.S.S Foundation) நிறுவனத்தினது செயற்பாடுகளும் தொடர்ந்துநடைபெற்று வருகின்றது. அவர்களின் செயற்பாடுகள் போற்றுதலுக்குரியது. அது மட்டுமல்லாமல் இங்கு நடைபெறும் வகுப்புக்களுக்கான இடவசதி கருதியும் மற்றும் பன்முகத் தேவைகளுக்குமாக எமது ஊரின் தொழிலதிபர் செல்லையா மகேந்திரனின் அவர்கள் தமது தந்தையார் S.K செல்லையா அவர்களின் ஞாபகார்த்தமாக பெரிய அழகியதோர் மண்டபத்தினை மிகக் குறுகிய காலத்திற்குள் கட்டி முடித்துள்ளார். அந்த மண்டபமும் இவ் ஆண்டு விழாவில் மிகவும் கோலாகலமாக திறந்து வைக்கப்படுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். இன்னும் பல வேலைத்திட்டங்கள் பாக்கி இருக்கின்ற காரணத்தினால் தாராள மனம் படைத்த அன்பர்கள் எங்களோடு இணைந்து கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகின்றோம். எங்கள் கலையரங்கம் இவ்வளவு தூரம் சிறப்புப் பெற்று மிளிர காரணமாக இருந்த உள்நாட்டு வெளிநாட்டு நிர்வாக குழுவினர்க்கும், எங்களோடு கரம் கோர்த்து உழைத்த பொதுமக்களாகிய உங்கள் அனைவர்க்கும் இந்நேரத்தில் நன்றியினையும் வணக்கத்தினையும் கூறுவதில் மகிழ்வடைகின்றேன்.

**சே.சந்திரலிங்கம்**

பொருளாளர்.

கலையரங்க கட்டட நிர்மாணக்குழு.

கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணித வகுப்பு



வயலின் வகுப்பு



ஆங்கில வகுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பலவாணர் கலையரங்க நடைமுறைச் செயற்றிட்டங்களும் நடைமுறைப்படுத்துகைகளும் - ஓர் பார்வை



அம்பலவாணர் கலையரங்கம் வெறுமனே வாணர் சகோதரர்களை நினைவு கூருமுகமாக உருவாக்கப்பட்டதோர் ஞாபகார்த்த மண்டபம் மட்டுமல்ல. எம் மண்ணில் வறுமைக் கோட்டிற்குக் கீழே பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் குறிப்பாக மாணவர்களின் கல்வி, கலை, கலாசார விழுமியங்களை வளர்த்தெடுப்பதன் மூலம் எமது சமூகத்தை மீளக் கட்டியெழுப்புவதனையும் குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டு வரும் ஓர் சமூகக் கட்டமைப்பாகும்.

இக்கலையரங்கம் கனடா அம்ப லவாணர் கலையரங்கக் கட்டட நிர்மாணக்குழுவினரால் புலம்பெயர் நாடுகளான கனடா, சுவிற்சர்லாந்து, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் வாழ்ந்து வருகின்ற எம்மண்ணின் மைந்தர்களிடம் பெறப்பட்ட நிதிப்பங்களிப்பினால் கட்டப்பட்டு 15.04.2017 இல் திறந்து வைக்கப்பட்டமை நாம் யாவரும் அறிந்ததே. இன்று இக் கலையரங்கம் தனது ஓராண்டு சேவையினைச் சிறப்பாகச் செய்தமையையிட்டு நாம் பெருமகிழ்வு அடைகின்றோம். கடந்த ஓராண்டில் இதனூடாகப் பல்வேறு கல்வி, தொழில்சார் செயற்றிட்டங்களைச் செயற்படுத்தியுள்ளோம். அந்தவகையில் எம்மால் செயற்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களாவன;

1. தொழில்சார் கணினிப் பயிற்சி நெறி
2. தொழில்சார் தையல் பயிற்சி நெறி
3. அழகியற் பாட நெறிகள்
   - சங்கீதம்
   - நடனம்
   - வயலின்
4. விசேட ஆங்கிலப் பாட நெறி
5. விசேட கணிதப் பாட நெறி

மேற்படி செயற்றிட்டப் பயிற்சி நெறிகளை நடைமுறைப்படுத்துவதற்குப் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் மண்ணையும் எம்மக்களையும் மறவாது சமூகப்பற்றுணர்வுடன் அனுசரணை வழங்கி எம்மை ஊக்குவித்துவரும் அனுசரணையாளர்களை இங்கு குறிப்பிட்டுக் கூறவேண்டியது கலையரங்கக் கட்டடக் குழுவினரின் கடமையுமாகின்றது.

**1. கணினி, தையல் பயிற்சி நெறிகள்**

இப்பயிற்சி நெறிகளுக்கான அனுசரணை கனடாவின் பிரபல வர்த்தகர் சேனாதிராசா சந்திரலிங்கம் அவர்களால் அவரது தாய், தந்தையரான அமரர் அதிபர் திரு.திருமதி சேனாதிராசா தெய்வநாயகி ஆகியோரின் ஞாபகார்த்தமாக 15.04.2017 இலிருந்து வழங்கப்படுகின்றது. இப்பயிற்சி நெறிகள் நடைபெற்றுவரும் சே. சேனாதிராசா கலாசார மைய இருமாடிக் கட்டிடத்தையும் தந்தையாரின் ஞாபகார்த்தமாக இவரே கட்டித்தந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**2. அழகியற் பாட நெறிகள்**

**சங்கீத பாட நெறி**

பாடசாலை மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புக்களை ஒழுங்கு செய்தல் செயற்றிட்டத்தின் கீழ் அழகியற் கல்வியின் ஓர் அங்கமான சங்கீத பாடத்திற்கான அனுசரணை கனடாவைச் சார்ந்த அம்பலவாணர் சபாநாதன் அவர்களால் அவரது தந்தையார் அமரர் சண்முகம் அம்பலவாணர் (சின்னவாணர்) அவர்களின் ஞாபகார்த்தமாக 21.10.2017 இலிருந்து வழங்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடன பாட நெறி**

நடன பாடத்திற்கான அனுசரணையை கனடாவைச் சார்ந்த கனகரெத்தினம் உமாசங்கர் அவர்களால் அவரது தாயார் அமரர் ஞானமணி கனகரெத்தினம் அவர்களின் ஞாபகார்த்தமாக 01.01.2018 இலிருந்து வழங்கப்படுகின்றது.

**வயலின் பாட நெறி**

வயலின் பாடத்திற்கான அனுசரணையை சுவிற்சர்லாந்து புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியம் 01.01.2018 இலிருந்து வழங்கி வருகின்றது.

**03. கணித பாட நெறி**

க.பொ.த.(சா/த) மாணவர்களுக்கான கணித பாடத்திற்கான அனுசரணை கனடாவைச் சார்ந்த திரு.செல்லத்துரை சபாரத்தினம் (EN Driving School) அவர்களால் அவரது தாய், தந்தையரான அமரர்கள் திரு. திருமதி செல்லத்துரை செல்லம்மா அவர்களின் ஞாபகார்த்தமாக 01.09.2017 இலிருந்து வழங்கப்படுகின்றது.

**04. ஆங்கில பாட நெறி**

விசேட ஆங்கில பாட நெறிக்கான அனுசரணை ஆசிரியை திருமதி ஸ்ரீலதா சிவஞானசுந்தரம் அவர்களால் அவரது தந்தையார் அமரர் அதிபர் நாகநாதி கார்த்திகேசு அவர்களின் ஞாபகார்த்தமாக 01.07.2017 இலிருந்து வழங்கப்படுகின்றது.

**5. MSS பவுண்டேஷனின் புலமைப்பரிசில்**

கனடாவைச் சார்ந்த திரு. சின்னத்தம்பி கனகலிங்கம் குடும்பத்தினரால் அவரது தாய் தந்தையரான அமரர்கள் திரு. திருமதி சின்னத்தம்பி சின்னத்தங்கம் ஞாபகார்த்தமாக உருவாக்கப்பட்டுள்ள மாகோ சின்னத்தம்பி சின்னத்தங்கம் பவுண்டேஷன் (MSS Foundation) புங்குடுதீவு பாடசாலையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஆதரவற்ற திறன்சார் மாணவர்கள் 29 பேருக்கு புலமைப்பரிசில் (ஒவ்வொரு மாணவருக்கும் மாதாந்தம் தலா 1000/- ரூபா) வழங்கும் செயற்றிட்டத்தை 15.04.2017 இலிருந்து செயற்படுத்தி வருகின்றது.

**6. வகுப்பறை தளபாடங்களுக்கான நிதி ஒதுக்கீடு**

விசேட கற்கை நெறிகளின் செயற்பாட்டிற்கான வகுப்பறைத் தளபாடங்களுக்காக வடக்கு மாகாணசபை உறுப்பினர் கௌரவ பாலச்சந்திரன் கஜதீபன் அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் (ரூபா 75,000.00) 5 நீள மேசைகளும், 5 நீள வாங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

**7. தையல் மெஷின்களுக்கான நிதி ஒதுக்கீடு**

தொழிற் பயிற்சி நெறிகளுக்கான செயற்றிட்டத்தின் கீழ் தையல் பயிற்சி நெறிக்கான தையல் மெஷின்கள் கொள்வனவிற்காக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கௌரவ பொன்னுத்துரை ஐங்கரநேசன் அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் இரண்டு தையல் மெஷின்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

**8. இசைக்கருவிகள் அன்பளிப்பு**

இந்தியத்தூதரக உதவித்தூதுவர் உயர்திரு ஏ. நடராசன் அவர்களிடம் எங்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய 17.09.2017 இல் இந்திய உதவித்தூதுவர் நேரடியாகவே வருகை தந்து இசைக்கருவிகள் (1 வீணை, 1 வயலின், 1 சுருதிப் பெட்டி) வழங்கி வைக்கப்பட்டது.

**09. மழைநீர் சேகரிப்புத்திட்டம்**

மழைநீர் சேகரிப்புச் செயற்றிட்டத்தின் கீழ் மழைக் காலத்தில் வீணாகும் மழை நீரைச் சேகரித்து பயன்படுத்தும் நோக்கில் தரைக்கீழ் நீர்த்தொட்டியை அமைக்கும் செயற்றிட்டத்திற்கு வடக்கு மாகாணசபைத் தவிசாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் அவர்களால் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து பரீட்சார்த்தமாக நீர்த்தொட்டி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10. அமரர் சி. கு. செல்லையா ஞாபகார்த்த மண்டபம்**

கலையரங்கில் நடைபெறும் நிகழ்வுகளின் போதான உணவு பரிமாறும் மண்டபமாகவும் விசேட பாட நெறிகளுக்கான வகுப்பறைகளாகவும் பயன்படுத்தும் நோக்கிலான பல்நோக்கு மண்டபமான செல்லையா ஞாபகார்த்த மண்டபத்தினை பிரபல வர்த்தகர் திரு. செல்லையா மகேந்திரன் அவர்கள் அவரது தந்தையார் அமரர் சி.கு. செல்லையா அவர்களின் ஞாபகார்த்தமாக அமைத்துத் தந்துள்ளார். மேற்படி மண்டபம் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**11. நிரந்தர வைப்பு நிதியம்**

கலையரங்கின் நிர்வாகச் செலவுகள், ஊழியர்கள் சம்பளம் போன்றவற்றினை ஈடுசெய்யும் நோக்கில் நிரந்தர வைப்பு நிதியம் அம்பலவாணர் கலையரங்கக் கட்டட நிர்மாணக்குழுவினரால் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வைப்பு நிதியத்தில் ஐம்பது இலட்சம் ரூபா நிரந்த வைப்பில் இடப்பட்டுள்ளது. இதன் மூலம் கிடைக்கும் வட்டியை வருடத்திற்கு ஒரு முறை எடுத்து கலையரங்க ஊழியர்களின் சம்பளம், நிர்வாக நடைமுறைச் செலவுகளை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**அந்திமகால உதவிநிதி**

கட்டட நிர்மாணக்குழுவைச் சேர்ந்த திரு. சி. கனகலிங்கம் அவர்களின் முயற்சியினால் புங்குடுதீவு 11ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்ட உயர்திரு ப. திருக்குமார் தனது பெற்றோரின் நினைவாக மரணத்தின் போது ஏற்படும் அந்திமகால செலவுக்காக நிதிவழங்கும் செயற்றிட்டம் ஒன்றினை ஏற்படுத்தி தந்துள்ளார். அதாவது வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கான திட்டமாக இதனைக் கலைப்பெருமன்றம் செயற்படுத்த முன்வந்துள்ளது. திரு ப. திருக்குமார் அவர்களின் பணி தொடர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

நன்றி மறப்பது நன்றன்று என்ற முதுமொழிக்கிணங்க, எங்களது செயற்றிட்டங்களுக்கு அனுசரணை வழங்கியவர்கள், எங்கள் கோரிக்கைகளை ஏற்று உதவி வழங்கியவர்கள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன்.

**நல்லையா தர்மபாலன்**
B.A (Hons) Dip in Ed, SLPS. I
முன்னாள் அதிபர்,
மக்கள் தொடர்பாளர் கட்டட நிர்மாணக்குழு கனடா,
உப தலைவர் கலைப்பெருமன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாண்டு கலைப்பெருமன்றத்தினால் கௌரவிக்கப்படும் பெரியோர்கள்

வைத்திய நிபுணர் ப. ஸ்ரீகிருஷ்ணா

வைத்திய நிபுணர் ந. சர்வணபவ

உயர்திரு செல்லையா மகேந்திரன்

உயர்திரு. சேனாதிராஜா சந்திரலிங்கம்

உயர்திரு. ச. துவாரகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**DR. P. SRIGRISHNA**
MBBS MD (Surgery) MRCS (Eng)
Consultant Orthopaedic Surgeon

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்ட ஓய்வு நிலை அரச அதிகாரியான உயர்திரு. சின்னையா பரமலிங்கம் - சிவயோகம் தம்பதியினரின் மகனான வைத்தியநிபுணர் ப. ஸ்ரீகிருஸ்னா அவர்கள் ஆரம்பக் கல்வியினை புங்குடுதீவு கணேசா வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியினை யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரியிலும் பயின்றவர். பாடசாலை நாட்களில் கல்வியில் மட்டும் நாட்டம் கொள்ளாது கலை, பண்பாட்டு நிகழ்வுகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர். க.பொ.த (சா.த) க.பொ.த (உ.த) ஆகிய பரீட்சைகளில் முன்னிலையில் தேறி யாழ்ப்பாணப்பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு தெரிவாகி சிறப்புச்தித்தியினைப் பெற்று வைத்தியகலாநிதியாக வெளியேறி நாட்டின் பல பாகங்களில் கடமையாற்றிய வைத்தியக்கலாநிதி ஸ்ரீகிருஸ்ணா தனது உயர்கல்வியினைப் பெற்றுக்கொள்ளும்முகமாக Post Graduate Institute of Medicine, University of Colombo, மற்றும் Royal College of surgeon's of England, UK , ஆகியவற்றில் இணைந்து MD(surgery) MRCS. உயர் பட்டங்களைப் பெற்று வைத்திய நிபுணராக தன்னை உயர்த்திக் கொண்டவர், எலும்பு முறிவு வைத்தியத்துறையில் (Consultant Orthopaedic surgeon ) வைத்தியநிபுணராக தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றி வருகின்றார்.

1976ம் ஆண்டு வாணர் திறந்த வெளி அரங்கில் நிறுவப்பட்டபோது இவரது குடும்ப உறவுகளின் பங்களிப்பு பெரிதும் இருந்துள்ளது. குறிப்பாக தமிழறிஞர் வித்துவான் சி. ஆறுமுகம் அவர்களின் பெறாமகன் ஆன இவருக்கு அவரது வழிகாட்டல்கள் இவரது உயர்ச்சிக்கு உந்து சக்தியாக இருந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

வைத்திய நிபுணர் ப. ஸ்ரீ கிருஸ்ணா அவர்கள் ஆன்மீகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் தல்லையப்பற்று முருகன் கோவில் கோபுர வேலைப்பணிக்கு இவர் பெருந்தொகை நிதியினை வழங்கியுள்ளார். இவரது வாழ்க்கைத்துணைவி யாழ் போதனா வைத்தியசாலையில் வைத்திய நிபுணராக கடமையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

வைத்திய நிபுணர். ப. ஸ்ரீகிருஸ்ணா அவர்கள் மருத்துவத்துறை மூலம் மக்களுக்கு செய்யும் அளப்பரிய பணியினை கருத்தில் கொண்டு புங்குடுதீவு கலைப்பெருமன்றத்தினராகிய நாம் அவரை கௌரவப்படுத்தவதில் பெருமையடைகின்றோம்.

**கலைப்பெருமன்றம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**DR. N. SARAVANABAVA.**
MBBS MD (Colombo)
Consultant Obstetrician & Gynecologist
Base Hospital, Thellippalai.

புங்குடுதீவு மேற்கு முதலாம் வட்டாரத்தினைப் பிறப்பிடமாகக் கொண்ட நமசிவாயம் - அம்பிகாவதி தம்பதியினரின் மகனான வைத்திய நிபுணர் ந. சரவணபவ 1972ம் ஆண்டு பிறந்தவர். யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் ஆரம்ப, இடைநிலைக்கல்வியைப் பயின்று கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு தெரிவானார். மருத்துவக் கல்வியினைப் பூர்த்தி செய்ததைத் தொடர்ந்து திசொய்சா பெண்கள் வைத்தியசாலை, தேசியவைத்தியசாலை, சிலாபம் பொது வைத்தியசாலை, யாழ் போதனா வைத்தியசாலை, றாகம போதனா வைத்தியசாலை ஆகியவற்றில் மருத்துவராக பணிபுரிந்துள்ளார்.

வைத்தியக் கலாநிதி ந. சரவணபவ தனது உயர் கல்வியைத்தொடரும் முகமாக Post Graduate Institute of Medicine. University of Colombo இலும். ஐக்கிய இராட்சியத்திலும் மேற் படிப்பினை மேற்கொண்டு மகப்பேற்று பெண்கள் சத்திர சிகிச்சை பயிற்சியினை பூர்த்தி செய்து விசேட வைத்திய நிபுணரானார். அதனைத்தொடர்ந்து செட்டிக்குளம், வவுனியா, கிளிநொச்சி வைத்தியசாலைகளில் வைத்தியநிபுணராக பணிபுரிந்து தற்போது தெல்லிப்பளை ஆதாரவைத்தியசாலையில் கடமையாற்றி வருகின்றார்.

வைத்தியசாலை தவிர்ந்து தனிப்பட்ட ரீதியில் வைத்திய சேவை செய்வதில் விருப்பமற்றவராக இருந்துவருவதுடன் தனது தந்தையாரின் அறிவுரைக்கமைய வைத்திய சேவையை நாடும் நோயாளிகளுக்கு குறிப்பாக தீவுப்பகுதியைச் சேர்ந்த மருத்துவ சேவையை வேண்டிநிற்கும், மகப்பேற்றுநிலை பெண்களின் மருத்துவதேவையினை எந்தவித பலனையும் எதிர்பாராது சேவையாற்றி வருகின்றார். வைத்தியசாலை கடமை நேரம் தவிர்ந்த காலத்தில் நடமாடும் சேவையாக புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு, ஊர்காவற்துறை மற்றும் தெல்லிப்பளை, உடுவில் சுகாதார வைத்திய அதிகாரப்பிரிவுகளுக்குச் சென்று பணியாற்றிவருகின்றார்.

வைத்திய நிபுணர் ந. சரவணபவ அவர்கள் தனது தந்தையார் வழிநின்று ஆன்மீகப்பணிகளில் தன்னை ஈடுபடுத்தி இறைபக்தி கொண்டவராக திகழ்கிறார். தான் சார்ந்த மருத்துவத்துறை மூலம் சகலருக்கும் தான்பெற்ற அறிவினை பயன்படுத்தி அளப்பரிய சேவையாற்றிவரும் வைத்தியநிபுணர் ந.சரவணபவ அவர்களுக்கு புங்குடுதீவு கலைப்பெருமன்றத்தினராகிய நாம் அவரை கௌரவப்படுத்துவதில் பெருமையடைகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**MR. SELLIAH MAHENDRAN**
Leading Businessman
Colombo Jaffna.

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தில் புகழ் பூத்த விவசாயக்குடும்பத்தில் அவதரித்த சின்னத்தம்பி குழந்தைவேலு செல்லையா - புவனேஸ்வரி அவர்களுக்கு சிரேஷ்ட புத்திரராக அவதரித்தார். இவர் தனது இளமைபராயத்தில் இவ்வூரிலேயே வாழ்ந்து தனது ஆரம்ப கல்வியை ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் பயின்றவர். அங்கு கற்கும் போது இவரது ஆர்வத்தை கண்ணுற்ற வித்துவான் சீ. ஆறுமுகம் அவர்கள் இவரை தான் கற்பிக்கும் கல்லூரியான ஸ்கந்தவரோதய கல்லூரிக்கு அழைத்து மேற்படிப்புக்கான உதவிகளைச் செய்து கொடுத்தார்.

அங்கும் இவர் தன் திறமைகளைப் பயன்படுத்தி கல்வி கற்கும் காலத்தில் பல பரிசில்களையும் திறமைச்சித்திகளையும் பெற்று ஆசிரியர்களின் நன்மதிப்பினைப் பெற்றுக்கொண்டார். இதன் பின்னர் கொழும்பில் Aquinas Higher Studies இல் கல்வி கற்று Marketing இல் பாண்டித்தியம் பெற்று பின் தந்தையாரின் உதவியுடன் கொழும்பில் தனியாக வியாபாரம் செய்து அதில் வெற்றிகண்டவர். இன்றும் அவர் உழைப்பில் தனியான ஒரு நற்பெயருக்கு இலக்கணமாக விளங்கிக்கொண்டிருக்கின்றார்.

அவரது அயராத உழைப்புக்கு மத்தியிலும் சமூக சேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க தவறவில்லை. இவர் Lions Club Colombo Central அங்கத்தவராகவும், அகில இலங்கை மாவட்ட தலைவராகவும் பதவி வகித்து இலங்கை பூராகவும் தனது செயற்பாட்டை நன்றாக செயற்படுத்திவந்துள்ளார். இவரின் காலத்தில் 5000இற்கும் மேலான மூக்குக் கண்ணாடிகளை இலங்கை பூராகவும் உள்ள கட்புலனற்றவர்களுக்கு சென்றடையவைத்து மிகப்பெரிய கௌரவத்தை பெற்றுக்கொண்டவர்.

திரு. செ. மகேந்திரன் அவர்கள் தந்தையார் வழிநின்று ஆன்மீகப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்தி இறைபக்தி கொண்டவராக இருந்து வருகின்றார்.

புங்குடுதீவு கலைப்பெருமன்ற போசகர் பொன் சுந்தரலிங்கம் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க கலைப்பெருமன்ற வளாகத்தில் தந்தையார் அமரர் சி. கு. செல்லையா அவர்களின் நினைவாக தனது சொந்த நிதியின் மூலம் பொது நோக்கு மண்டபத்தினை அமைத்துக் கொடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் மலாயன் கபே உரிமையாளராகிய திரு. M.K கதிரவேலு அவர்களின் புதல்வி சாந்தநிதி அவர்களை கைப்பிடித்து நான்கு குழந்தை செல்வங்களுக்கு தந்தையாக உள்ளதுடன் தனது நான்கு பிள்ளைகளையும் பட்டதாரிகளாக கல்விகற்க வைத்து மனமகிழ்வுடன் வாழ்ந்து வருகின்றார்.

வர்த்தகத் துறையின் மூலமாகவும் சமூக சேவையூடாகவும் அளப்பரிய சேவையாற்றிவரும் உயர்திரு செ. மகேந்திரன் அவர்களுக்கு புங்குடுதீவு கலைப்பெருமன்றத்தினராகிய நாம் அவரைக் கௌரவப்படுத்துவதில் பெருமை கொள்கின்றோம்.

**கலைப்பெருமன்றம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**MR. S. SHANTHIRALINGAM**
Leading Businessman
Canada.

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவை வாழ்விடமாகவும் கொண்ட இளைப்பாறிய அதிபரான அமரர்களான சேனாதிராசா தெய்வநாயகி தம்பதிகளின் புத்திரனான உயர்திரு சே.சந்திரலிங்கம் அவர்கள் கனடாவில் பிரபலமான தொழிலதிபராக இருந்து வருகின்றார். இவர் ஆரம்பக்கல்வியை புங்குடுதீவு கணேசா வித்தியாலயத்திலும் இடைநிலைக்கல்வியை பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியிலும் பயின்றவர். நாட்டில் நிலவி வந்த அசாதாரண சூழ்நிலையினால் பல்கலைக்கழகக் கல்வியில் நாட்டம் கொள்ளாது கனடாவிற்கு புலம் பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இவர் கனடாவில் வாழ்ந்து வரினும் மண்பற்றின் காரணமாக தான் பிறந்த கிராமத்திற்கு பல்வேறு நலத்திட்டங்களைச் செய்து வருகின்றார். திரு. சந்திரலிங்கம் அவர்கள் அம்பலவாணர் கலையரங்கக் கட்டுமான குழுவின் பொருளாளராக செயற்பட்டுவருவதுடன் கலைப்பெருமன்றத்தின் வளர்ச்சியில் பெரும் பங்குகொண்டு உழைத்துவருகின்றார். கலைப்பெருமன்றத்தின் வேண்டு கோளுக்கிணங்க அவ்வளாகத்தில் பெருநிதிப்பங்களிப்புடன் சேனாதிராசா தெய்வநாயகி கலாசாரமண்டபம் ஒன்றினை அமைத்து 22/04/2018 ம் திகதியன்று சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்படுகின்றது. அதுமட்டுமல்லாது இக்கலாசார மண்டபத்தில் நடைபெற்றுவரும் கணணிப்பயிற்சி, தையல்பயிற்சிக்கான செயற்றிட்டதில் பணியாற்றிவரும் ஆசிரியர்களுக்கான ஊதியத்தினை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து வழங்கியும் வருகின்றார்.

அம்பலவாணர் கலையரங்கத்தினை அமைப்பதற்கு முயற்சித்த காலத்தில் இருந்து அதன் செயற்பாட்டிற்கு தனது முழு ஒத்துழைப்பையும் சிரமம் பாராது அளித்துவருவதுடன் கனடாவில் இது தொடர்பாக நடைபெற்றுவரும் கலந்துரையாடல்களுக்கான சகல ஏற்பாடுகளையும் தொடர்ச்சியாக செய்துவருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சமூக சேவையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி பல்வேறு அமைப்புக்களுடன் கனடாவிலும் ஈழத்திலும் இணைந்து செயற்பட்டுவரும் உயர்திரு சே. சந்திரலிங்கம் அவர்களின் சேவையினைப் பாராட்டி கலைப்பெருமன்றம் அவரை பெருமையுடன் கௌரவிக்கின்றது.

**கலைப்பெருமன்றம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரும்பணியாற்றிய பெரியோரைப் போற்றுவாம்

**"பெரியவாணர் என்றும் சின்னவாணர்"** என்றும் நம் அனைவராலும் அன்புடனும் நன்றியுடனும் மரியாதையுடனும் அழைக்கப்பட்டுவந்த ஸ்ரீமான் க.அம்பலவாணர் மற்றும் ஸ்ரீமான் ச.அம்பலவாணர் ஆகிய பெருந்தகைகள் புங்குடுதீவுக் கிராமத்துக்கும் தீவுப் பகுதியின் ஏனைய பாகங்களுக்கும் ஆற்றிய இமாலய சேவைகள் இவர்களின் அழியாப் புகழுடம்புகளாகும்.

அப்பணிகளுள் முதன்மையானது புங்குடுதீவையும் லைடன் தீவையும் இணைக்கும் அம்பலவாணர் தாம் போதியாகும். மடத்துத்துறையிலிருந்து தாம்போதி யொன்றை அமைக்கும் சாத்தியகக்கூற்றை ஆராயும் நோக்குடன் கடும் மாரிகாலத்தில் பொதுமராமத்து இலாகாவைச் (P.W.D.) சேர்ந்த வெள்ளைக்கார பொறியியலாளர் குழுவொன்று புங்குடுதீவுக்கு ஓடத்தில் வருகைதந்தது. மாட்டுவண்டிகளில் ஏற்றிக் கொண்டுவரப்பட்ட பாரிய கற்களை மடத்துத்துறைக் கடலில் கொட்டியது. அந்த மாரிகாலத்தில் வீசிய கச்சான் காற்றுக் காரணமாக கொட்டிய கற்கள் கடலோடு அள்ளுண்டு போயின. "இத்தீவுக்கு தாம்போதி அமைப்பது என்பது என்றுமே சாத்தியமாகாது" என்ற குறிப்போடு குறித்த திணைக்களத்தின் கோவை மூடப்பட்டது.

பெரியவாணர் தனது அயராத முயற்சியால் சில ஆண்டுகளின் பின்னர் அதாவது 1930களின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொறியியலாளர்கள் அடங்கிய புதிய குழுவொன்று புங்குடுதீவுக்கு வருகைதருவதற்கான ஏற்பாடுகளைச்செய்தார். இதற்காக அவர் மிகுந்த பயணக்கஷ்டத்தை கொடுக்கத்தக்க பருவகாலத்தை தேர்ந்தெடுத்தார். வருகைதந்த பொறியிலாளர் குழுவை வேலணைத் துறையிலிருந்து மடத்துத்துறைக்கு படகுமூலம் ஏற்றிவந்தார். புங்குடுதீவைச் சேர்நத குழந்தை என்னும் பெயருடைய மூத்த மீனவரொருவரின் படகையே இதற்காக அவர் அமர்த்தியிருந்தார். கோடை காலமாகையால் கடல் நீர் உள்வாங்கி கரையின் பெரும்பகுதி மேடாயிருந்தது. படகு அத்தகைய திட்டுகளில் அடிக்கடி புதையும்படியாக அதனை ஓட்டிச்செல்லுமாறு அவர் அந்தப்படகோட்டிக்கு ஏற்கனவே அறிவுறுத்தியிருந்தார் என்பது அப்போதைய இரகசியம் ஆகும். பலமுறை படகு அவ்வாறு புதையும் சந்தர்ப்பங்களில் படகோட்டி படகைவிட்டிறங்கி படகை தன் கைகளால் தள்ளி நீருள்ள பகுதிக்கு இட்டுச்சென்று பின்னர் பயணத்தை தொடங்கினார். இந்த அவலத்தை நேரடியாக உணர்ந்த பொறியியலாளர் குழு மடத்துவெளிக் கரையை அடைந்ததும், அவ்வூர் மக்களுக்கு தாம்போதியொன்று இல்லாமையால் ஏற்படும் துன்பத்தினை நினைந்து வருந்தினர். அத்தோடு தாம்போதியமைக்கும் வேலைகள் தாமதமின்றி ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று தமது திணைக்களத்துக்கு விதந்துரைத்தனர். இதன்பயனாக அரசினரால் ஆரம்பிக்கப்பட்டதே இன்று நீண்டு நெடிதாய் காட்சிதரும் அம்பலவாணர் தாம்போதியாகும். படகோட்டிக்கு கொடுக்கப்பட்ட மேற்சொன்ன இரகசியத்தை தனது மறைவுக்கு சில ஆண்டுகளுக்கு முன்னதாக எனக்கு விளக்கியவர் சின்னவாணர் என்பது குறிப்பிடற்பாலது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோண்டாவிலில் பாரிய அளவில் தாபிக்கப்பட்டிருந்த கைத்தறி நெசவாலையின் அதிபர் குணரத்தினத்தின் தந்தையார் "சட்டம்பி இராமநாதனின்" (மாரியம்மன் சந்தியிலுள்ள) இல்லத்தில் ஆரம்பத்தில் தொடங்கி இயங்கிவந்த மருத்துவமனைக்கென புதியதோர் காணிநிலத்தை இந்து மாகடலின் கரையோரத்தில் ஏற்பாடு செய்து அதை அமைத்த பெருமையும் பெரியவாணரையே சாரும்.

வீராமலையில் (கோரியாவடியில்) நிலைகொண்டிருந்த பிரித்தானியப் படைப்பிரிவு அங்கிருந்து இடம்பெயர்ந்து சென்றவேளை அப்பிரிவினால் பயன்படுத்தப்பட்டுவந்த தொலைபேசித் தொடர்பினை புங்குடுதீவு அஞ்சலகத்திற்கு பெற்றுத்தந்த பெருமைக்கும் உரித்தாளர் ஸ்ரீமான் க.அம்பலவாணர் அவர்களே ஆவார். அன்று புங்குடுதீவு அஞ்சலகத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட முதலாவது தொலைபேசி அழைப்பின்மூலம் அவர் கொழும்பிலிருந்த தபால் தந்தி அமைச்சருடன் உரையாடி நன்றி கூறினார்.

எனினும், பாரிய எதிர்பார்ப்புடன் 1952ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் ஊர்காவற்றுறைத் தொகுதியில் போட்டியிட்ட பெரியவாணர் அதில் அல்பிரட் தம்பியையா அவர்களிடம் தோல்வியுற்றார் என்ற செய்தியால் மக்கள் தாங்கொணாத் துயருற்றனர். எவ்வாறாயினும் ஊர் காவற்றுறைத் தொகுதிக்கு பற்பல சேவைகளை பிற்காலத்தில் ஆற்றிவந்த அல்பிரட் தம்பியையா அவர்கள் பெரியவாணரின் அயரா உழைப்பினால் இறுதிக்கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்த புங்குடுதீவு - லைடன் தீவு தாம்போதி வேலைகளைப் பூர்த்தி செய்வித்ததோடு 1952ஆம் ஆண்டளவில் அப்போதைய போக்குவரத்து மராமத்து அமைச்சராயிருந்த சேர். ஜோன் கொத்தலாவலை அவர்களை அழைத்துவந்து திறப்புவிழா நடாத்தினார். அதன்பின்னர் பல ஆண்டுகள் கழித்து - 1960ஆம் ஆண்டளவிலேயே பண்ணைத் தாம்போதியும் பூர்த்தியானது. முன்னர் முழுநாட் பயணமாயிருந்த யாழ் - புங்குடுதீவுப் பயணம் அதன்பின்னர் வெறும் முப்பது நிமிட அதிவேக பயணமாய் மாறியது. தாம்போதியின் நிர்மாணப் பணிகளுக்கு நேரடிப் பொறுப்பாயிருந்து உறுதியான அமைப்பு வேலைகளை மேற்கொண்டவர் சின்னவாணர் ஆவார். இதற்கு காரணகர்த்தாக்களாயிருந்த வாணர் சகோதரர்களை எம்மால் மறக்க முடியுமோ.

மறைந்த சரவணமுத்து உடையாரின் புத்திரியை (முன்னாள் இராஜேந்திரம் விதானையாரின் சகோதரி) மணம் முடிந்திருந்த பெரியவாணரின் இறுதிக்கிரிகைகள் புங்குடுதீவு "உடையார் இல்லத்திலேயே நடைபெற்றது. தாம்போதிகள் முடிவுறாதிருந்த அந்த நாட்களிலும் கூட அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக தலைநகரிலிருந்தும் யாழ் நகரிலிருந்தும் ஆயிரக்கணக்கானோர் வருகை தந்தனர். அன்று புங்குடுதீவுக்கு நிரைநிரையாக வந்த மோட்டர் வண்டிகளின் எண்ணிக்கையை நான் அதன்பின்னர் இதுவரை அங்கு கண்டதில்லை.

சிங்கப்பூரிலிருந்து அண்ணளவாக 1920களின் பிற்பகுதியில் புங்குடுதீவுக்குத் திரும்பிய ஸ்ரீமான் ச.அம்பலவாணர் (சின்னவாணர்) அவர்கள் அங்கு கற்பகம் என்ற பெயருடைய நங்கையை கரம்பிடித்து நீண்ட காலம் புங்குடுதீவில் வாழ்ந்து வந்தார். புங்குடுதீவுக்கிராமச் சங்கத்தலைவராக பல தசாப்தகாலம் பெருந்தொண்டாற்றினார். கிராமத்திலேயே மிகப்பெரிய தனவந்தரான அவர் பாரிய நிர்மாண ஒப்பந்தகாரராகவும் சமூகத் தொண்டனாகவும் திகழ்ந்தவர். அவரிடம் கடன்படாத ஆட்களே அங்கு இல்லை என்னும் அளவுக்கு வாரியிறைத்த வள்ளல். கடனைத் திருப்பி அடைத்தவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகமிகச் சிலரே என்பது மிகவும் வருத்தத்துக்குரியது. எனினும் அவரிடமிருந்த வள்ளற்றன்மையும் ஊரபிமானமும் காரணமாக அவர் அதைப் பொருட்படுத்தவில்லை. மறையும்வரை அவர் சீமானாகவே வாழ்ந்தார்.

ஏறத்தாழ மூன்று மைல் (4.5 கிலோமீற்றர்) நீளமான புங்குடுதீவு - லைடன்தீவு தாம்போதியின் நிர்மாணப்பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றிய பெருமை சின்னவாணருக்கே உரித்தாகும். ஆரம்பத்தில் பாரிய கற்கள் மாட்டு வண்டிகளை பயன்படுத்தியே ஏற்றியிறக்கப்பட்டன. பின்னர் சின்னவாணருக்குச் சொந்தமான ஒரு லொறிவண்டி இதற்கு பயன் படுத்தப்பட்டது. இலங்கையில் அதிநீளமான இத்தாம்போதி சின்னவாணரின் நிர்மாணத்திறனையும் அவரது சேவையையும் நித்தம் பறைசாற்றி நிற்கின்றன. ஆதலால் அவர் நம் எல்லோருடைய உள்ளத்திலும் நிலைத்திருக்கிறார்.

புங்குடுதீவு பற்றிய இன்னோரன்ன பல்வேறு தகவல்கள் சின்னவாணரிடம் உறைந்திருந்தமையை அவதானித்த நான் அவர் மறைவதற்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் அவரிடம் ஒரு வேண்டுகோளை விடுத்தேன். அதாவது அந்தப் பொன்னான தகவல்களை உள்ளடக்கி புங்குடுதீவுக் காதம் என்ற பெயரில் ஒரு நூலை வெளியிடுவீர்களா என அவரிடம் வினவினேன். அதற்கு சின்னவாணர் அவர்கள் தனது மகிழ்ச்சியை தெரிவித்ததோடு அந்த ஆலோசணைக்கு இணக்கமும் தெரிவித்தார். "நான் சொல்லச் சொல்ல நீ குறித்துக்கொண்டு பின்னர் அதனை தூயதமிழில் எழுது. இறுதியில் சரிபார்க்கலாம்" என்றார். ஆனால் காத்திராப் பிரகாரமாக சில தடங்கல்களின் நிமித்தம் அந்த முயற்சி கைகூடாமற் போனது மிகவும் துர்ப்பாக்கியமே.

இத்தனை பெருமைகளுக் குரிய வர்களாகவும் எம்மூருக்கு மாபெருந் தொண்டாற்றியவர்களும் எங்கள் உள்ளங்களில் எப்போதும் நினை விலிருப்பவர்களுமாகிய வாணர் சகோதரர்களுக்கு நன்றிக்கடன் செலுத்தும் விதத்தில் அவர்களுடைய நினைவாக தங்கள் நேரம், சிரமம், செல்வம் என்பவற்றை அர்ப்பணஞ்செய்து அம்பலவாணர் கலையரங்கம் (Ambalavanar Art Gallery) என்னும் ஒரு மாபெரும் அரங்கினை புங்குடுதீவில் அமைத்து அதன் திறப்புவிழாவை சிறப்பபுற நடாத்தி அவ்விழாவில் எவ்வித பேதமும் இன்றி பலபெரியோர்களை அழைத்து சிறப்பித்த அன்பு இதயங்கள் அனைவருக்கும் மிகவும் பாராட்டுக்குரியவர்கள். அவர்கள் அனைவரும் சிறப்புறவாழ இறைவன் அருள் செய்யவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன். கலையரங்கம் இவ்வாண்டு (2018) தனது ஓராண்டுப் பூர்த்தியை கொண்டாடுகின்ற விழாவும் அதனையொட்டிய மலர் வெளியீடும் சிறப்புடன் நிறைவேற வாழ்த்துகின்றேன். அத்துடன் தனது தந்தையாரின் பொதுத்தொண்டு ஆர்வத்தை முன்னெடுக்கும் வகையில் சொந்தப்பணத்தை பல இலட்சக்கணக்கில் செலவிட்டு பொது நோக்கு மண்டபமொன்றை அமைத்து அதன் திறப்புவிழாவையும் ஏககாலத்தில் நடாத்துகின்ற அன்புக்குரிய தம்பி செல்லையா மகேந்திரன் அவர்களுக்கும் எனது பராட்டுக்களும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

**திரு. சண்முகம் இராமலிங்கம்**
ஓய்வு நிலை உதவி அரசாங்க அதிபர்,
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பலவாணர் அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் (15.04.2017 - 22.08.2018)

| | |
|---|---|
| *15.04.2017* *16.04.2017* | கலையரங்கு திறப்பு விழாவும் நிகழ்ச்சிகளும் |
| *22.04.2017* | J/25, J/26 கிராம அலுவலர்களும் மக்களும் சந்திப்பு |
| *12.05.2017* | தீவக வலய ஆசிரியர்கள் ஆலோசனைக் கூட்டம் |
| *15.05.2017* | J/24, J/25. J/26 கிராம அலுவலர் பிரிவில் பொலிஸ் - பொது மக்கள் கூட்டம் |
| *21.05.2017* | திலீப்குமார் ரூபிகாவின் முதலாவது பிறந்த நாள் நிகழ்வு |
| *27.05.2017* | அரங்கில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான கூட்டம் - வகுப்புகள் ஆரம்பம் |
| *28.05.2017* | தல்லையப்பற்று சனசமூக நிலையப் பொதுக் கூட்டம் |
| *20.07.2017* | கிராம அலுவலர்களுக்கும் மாக்கொண்டை வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்குமான கூட்டம் |
| *30.07.2017* | அருளப்பு - இதயமுத்து தம்பதிகளின் 55 ஆவது திருமணநாள் நிகழ்வு |
| *04.08.2017* *05.08.2017* *06.08.2017* | இலங்கை அப்போஸ்தல திருச்சபை நிகழ்வு |
| *23.08.2017* | இராசேந்திரன் மகள் பூப்புனித நீராட்டு விழா |
| *29.08.2017* | பிரதேச செயலகத்தினால் மகளிர் அபிவிருத்திக்கான கருத்தரங்கு |
| *08.09.2017* | புங்குடுதீவு ஸ்ரீபன் ஜோர்ச் சந்திரகாந்தன் திருமண வைபவம் |
| *17.09.2017* | இந்தியத் துணைத்தூதுவர் கௌரவிப்பு நிகழ்வு |
| *30.09.2017* | வாணி விழா |
| *10.10.2017* | கோட்ட மட்ட முன்பள்ளி ஆசிரியர் தின விழா |
| *25.10.2017* | கலைப்பெருமன்ற ஆலோசனைக் கூட்டம் |
| *29.10.2017* | தாயகம் அமைப்பினால் நடாத்திய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கௌரவிப்பு விழா |
| *09.11.2017* | பிரதேச செயலகத்தின் கலாசார செயலக முன்னேற்பாட்டுக் கூட்டம் |
| *14.11.2017* | வேலணை பிரதேச செயலக கலாசாரப் பெருவிழா |
| *16.11.2017* | பிரதேச செயலகத்தினால் போசாக்குத் தொடர்பான கூட்டம் |
| *20.11.2017* | பிரதேச செயலகத்தினால் அடையாள அட்டை இல்லாதவர் களுக்கான நடமாடும் சேவை (புங்குடுதீவு - நயினாதீவு மக்கள்) |
| *01.12.2017* | பொது நோக்கு மண்டப அத்திவாரக்கல் நாட்டும் விழா |
| *06.12.2017* | கிருஷ்ணபிள்ளை மனைவி நினைவாகப் பாடசாலை மாணவர்களுக்கு அன்பளிப்புப் பொருட்கள் வழங்கலும் தபால் மூலம் சேமிப்புக் கணக்கு வழங்கலும் |
| *12.01.2018* | முத்துக்குமார் சுரேஷ்கண்ணாவின் திருமண வரவேற்பு நிகழ்வு |
| *12.02.2018* | திருலிங்கநாதன் சஞ்சீவ் திருமண வரவேற்பு நிகழ்வு (லண்டன்) |
| *20.02.2018* | திருநாமம் - மெரிஸ்ரலாவின் மகளின் பூப்புனித நீராட்டு விழா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பலவாணர் கலையரங்கம் வரவு செலவு விபரம்

**அம்பலவாணர் கலையரங்கம் (கனடா வரவு)**

**(01.04.2017 - 31.03.2018 வரை)**

| | கனடா டொலர் |
|---|---|
| நுட்பநாதன் நடனபாதன் | 6235.00 |
| சேனாதிராசா சந்திரலிங்கம் | 3000.00 |
| ஸ்ரீ ரங்கனாஸ் நகைமாளிகை | 1650.00 |
| டாக்டர் நாகேஸ்வரி முரளிதரன் | 1210.00 |
| கார்த்திகேசு குகபாலன் | 1000.00 |
| கோபாலபிள்ளை அருள்தீபன் | 1100.00 |
| தம்பிப்பிள்ளை இரத்தினராசா | 1000.00 |
| இரத்தினசபாபதி சிவாஸ்கரன் | 1000.00 |
| சத்தியவதி சங்கரலிங்கம் | 1000.00 |
| நல்லையா தர்மபாலன் | 1000.00 |
| பொன். சுந்தரலிங்கம் | 1469.00 |
| சண்முகலிங்கம் சதாசிவம் | 1000.00 |
| சின்னத்தம்பி கனகலிங்கம் | 1100.00 |
| செல்லத்துரை சபாரத்தினம் | 1300.00 |
| கதிரவேலு நாகராசா | 500.00 |
| அருண் குலசிங்கம் | 500.00 |
| அபி அமலன் | 500.00 |
| செந்தில்நாதன் ரமேஸ் | 500.00 |
| அருந்ததி கமலநாதன் | 500.00 |
| செல்வரெத்தினம் செல்வராசா தாமிரபரணி | 500.00 |
| அம்பலவாணர் சபாநாதன் | 500.00 |
| அத்தனன் விஜி சோமசுந்தரம் | 100.00 |
| கென் கிருபா | 100.00 |
| முத்தையா அரியராசா | 100.00 |
| கனகரெத்தினம் கலைமதி | 80.00 |
| மொத்த வரவு | 26,944.00 |
| மொத்த வரவு (இலங்கை ரூபாவில்) | 3233280.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அம்பலவாணர் கலையரங்கம் (இலங்கை வரவு)**

**(01.04.2017 - 31.03.2018 வரை)**

| | | |
|---|---|---|
| 1) முருகேசு நேமிநாதன் (லண்டன்) | 100,000.00 | |
| 2) சேனாதிராசா சந்திரலிங்கம் | 150,165.00 | |
| 3) கனகரெத்தினம் உமாசங்கர் | 50,000.00 | |
| 4) சுவிஸ் - புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியம் | 40,540.00 | |
| 5) கார்த்திகேசு ஸ்ரீலதா | 10,000.00 | |
| 6) சாந்தி பாலசிங்கம் (மின்சாரக் கட்டணம்) | 65,000.00 | |
| 7) அம்பலவாணர் கைலாயநாதன் | 10,000.00 | |
| 8) இரஞ்சினி சந்திரபாலன் | 2,000.00 | |
| 9) மேலதிக பொன்னாடை (திருப்பிக்கொடுத்தது) | 10,000.00 | |
| 10) மேலதிக சீற் விற்பனை | 10,000.00 | |
| 11) நானாவித வரவு | 16,390.00 | |
| | | 464,095.00 |
| **வங்கி வரவு** | | |
| 1) மக்கள் வங்கி நிரந்த வைப்பு வட்டி வரவு | 207,567.12 | |
| 2) மக்கள் வங்கி சேமிப்புக் கணக்கு வட்டி | 333.44 | |
| | | 207,900.56 |
| **அரங்க நிகழ்ச்சிகள்** | | |
| 1) விழா மலர் விற்பனை | 9,500.00 | |
| 2) பிறந்த நாள் விழா | 10,000.00 | |
| 3) அப்போஸ்தல சபை | 85,000.00 | |
| 4) பூப்புனித நீராட்டு விழா | 35,000.00 | |
| 5) திருமண விழா | 55,000.00 | |
| 6) தாயக நிகழ்வு அன்பளிப்பு | 2,000.00 | |
| | | 196,500.00 |
| மொத்த வரவு (இலங்கை) | | 868,495.56 |
| வரவு (கனடா) | | 3,233,280.00 |
| மொத்த வரவு | | 4,101,775.56 |

**அம்பலவாணர் கலைப்பெருமன்றச் செலவு விபரம் (கனடா)**

**01.04.2018 - 31.03.2018 வரை**

கனடா டொலர்

| | |
|---|---|
| 1) கலையரங்க இறுவட்டு பிரதி பண்ணியது (DVD) | 1075.00 |
| 2) வெளிநாடுகளுக்கு அனுப்பிய பார்சல் செலவு | 340.00 |
| 3) கணக்கறிக்கை அச்சிட்டது | 450.00 |
| 4) மலர் வளையம் (2) | 240.00 |
| 5) இறுவெட்டு கவர் | 100.00 |
| 6) மாலை (2) | 130.00 |
| 7) வாழ்த்துமடல் | 75.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 8) கவர், பாக், றபர்பான்ட் | 35.00 | |
| 9) காசனுப்பிய கூலி | 24.00 | |
| மொத்தம் | 2469.00 | |
| மொத்தம் (இலங்கை ரூபாவில்) | 296280.00 | |

**அம்பலவாணர் கலைப்பெருமன்றச் செலவு விபரம்**

**(01.04.2017 - 31.03.2018 வரை)**

**(இலங்கை)**

**அலுவலக ஊழியர் சம்பளம்**

| | | |
|---|---|---|
| 1) பசுபதி சுகந்தா | 144000.00 | |
| 2) ம. ஜீவரெத்தினம் | 93900.00 | |
| 3) அ. ஜெயானந்தன் | 4500.00 | |
| 4) கு. சந்திரா (முகாமையாளர்) | 85300.00 | |
| | | 327700.00 |
| தளபாடக் கொள்முதல் | | |
| 1) மேசை கதிரை | 60000.00 | |
| 2) குடிநீர் தாங்கி ஸ்ராண்ட் | 22000.00 | |
| 3) தண்ணீர் பாய்ச்சும் கோஸ் பைப் | 5900.00 | |
| 4) மண்டப சுத்திகரிப்புப் பொருட்கள் | 4390.00 | |
| | | 92290.00 |
| 1) ஆசிரியர்களுக்கான வேதனம் | 279150.00 | |
| 2) மின்சாரக் கட்டணம் | 68390.00 | |
| 3) குடிநீர் | 52550.00 | |
| 4) வேலையாட்கள் கூலி | 43400.00 | |
| 5) காகிதாதிகள் | 3271.00 | |
| 6) பொதுநோக்கு மண்டப அடிக்கல் நாட்டுவிழா | 10045.00 | |
| 7) வயறிங் கம்பி | 1720.00 | |
| 8) இந்தியத் துணைத்தூதர் வரவேற்பு விழா | 8725.00 | |
| 9) பரிசுப் பொருட்கள் | 7505.00 | |
| 10) சிற்றுண்டி தேநீர்ச் செலவு | 11475.00 | |
| 11) பூமாலை | 1000.00 | |
| 12) மின்பிறப்பாக்கி கொடுப்பனவு | 57952.00 | |
| 13) நானாவித செலவு | 17245.00 | 562428.00 |
| மொத்தச் செலவு (இலங்கை) | 982418.00 | |
| மொத்தச் செலவு (கனடா) | 296280.00 | |
| மொத்தச் செலவினம் | 1278698.00 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அம்பலவாணர் கலையரங்கம்**

**வரவு - செலவு விபரம்**

**(01.04.2017 - 31.03.2018 வரை)**

| வரவு விபரம் | தொகை | செலவு விபரம் | தொகை |
|---|---|---|---|
| நன்கொடை வரவு (இலங்கை) | 464095.00 | அலுவலக ஊழியர் சம்பளம் | 327700.00 |
| வங்கி வரவு (வட்டி) | 2079500.56 | தளபாடக் கொள்முதல் | 92290.00 |
| அரங்க நிகழ்ச்சிகள் | 196500.00 | பன்முகச் செலவுகள் | 562428.00 |
| நன்கொடை வரவு (கனடா) | 3233280.00 | கனடா - செலவு | 296280.00 |
| | | கட்டட ஒப்பந்தகாரர் | 877965.00 |
| | | வங்கி நிரந்தர வைப்பு | 1400000.00 |
| | | மக்கள் வங்கி இருப்பு I | 246637.08 |
| | | மக்கள் வங்கி இருப்பு II | 260874.44 |
| | | கையிருப்பு | 37601.04 |
| மொத்த வரவு | 4101775.56 | மொத்தச் செலவு | 4101775.56 |

சி. திருலிங்கநாதன்
பொருளாளர்
கலைப்பெருமன்றம்

சே. சந்திரலிங்கம்
பொருளாளர்
கட்டட நிர்மாணக்குழு

சு. சண்முகானந்தன்
கணக்குப்பரிசோதகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

- இவ் விழாவில் பிரதம விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்த வடமாகாண ஆளுநர் கௌரவ ரெயினோல்ட் கூரே, அரச அதிபர் திரு நா. வேதநாயகன் அவர்களுக்கும்
- ஆசியுரை, சிறப்புரைகள் வழங்கிய அனைத்து உறவுகளுக்கும்
- மலருக்கான ஆசிச்செய்தி, வாழ்த்துச்செய்தி, கட்டுரைகள் வழங்கிய அன்புள்ளங்களுக்கும்
- அமரர் க.கு. செல்லையா நினைவு மண்டபம் அமைத்துத்தந்த திரு. செ. மகேந்திரன், அமரர் சேனாதிராசா தெய்வநாயகி கலாசார மண்டபம் அமைத்துத்தந்த திரு. சே. சந்திரலிங்கம் அவர்களுக்கும்
- கலைப்பெருமன்றத்தின் கௌரவிப்பினை ஏற்றுக் கொண்ட வைத்திய நிபுணர்களான. ஸ்ரீகிருஷ்ணா, ந.சரவணபவ மற்றும் தொழிலதிபர்களான திரு.எஸ் மகேந்திரன் திரு. சே.சந்திரலிங்கம் ஆகியோருக்கும்
- மங்கள இசை வழங்கிய நாதஸ்வர கலைஞர்களுக்கும்
- கலை நிகழ்வுகள் வழங்கிய இணுவையூர் R.S. கோபிதாஸ் மற்றும் ராஜன் குழுவினருக்கும்
- கலை நிகழ்வுகள் வழங்கிய தொண்டர் திருநாவுக்கரசு கலை இலக்கிய மன்றத்தினர், பாரதி கலாமன்றத்தினர், தாயகம் சமூக சேவையினர், கலைப்பெருமன்ற ஆசிரியர்களுக்கும்
- கலை நிகழ்ச்சிகளுக்கான அனுசரனை மற்றும் விளம்பரம் ஆகியவற்றிற்கு அனுசரணை வழங்கிய ஸ்ரீரங்கனாஸ் நிறுவனத்தினருக்கும்
- சிவன் T.V க்கு அனுசரணை வழங்கிய சுவிஸ் திரு. இ. இரவீந்திரன் அவர்களுக்கும்
- உணவு அனுசரணை வழங்கிய கனடா திரு. சே. சந்திரலிங்கம் அவர்களுக்கும்
- கட்டடங்களை அழகுறக் கட்டித்தந்த ஒப்பந்தகாரர் திரு. ச. துவாரகன் அவர்களுக்கும்
- இம் மலரை அழகுற அச்சிட்டுத்தந்த கரிகணன் தனியார் நிறுவனத்திற்கும்
- ஒட்டுமொத்தமாக இவ் விழாவுக்கும் மலர் வெளியீட்டுக்கும் முழுமையான ஆதரவினை நல்கிய கனடா கட்டட நிர்மாணக் குழுவினருக்கும்
- இவ் விழாவிற்கு வருகை தந்துசிறப்பித்த அனைவருக்கும்
- இவ் விழா சிறப்புறப் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும்

**கலைப்பெருமன்றத்தின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.**

**செயலாளர்**

**கலைப்பெருமன்றம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Harikanan, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org